# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆனி 01 ஞாயிற்றுக்கிழமை (15-06-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 197


## சியாமாசெட்டி விமானம் தரையில் மோதி விபத்து!

### விமானி பலி; மற்றொருவர் காயம்

கொழும்பு, ஜூன் 15

அநுராதபுரத்தில் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த விமானப்படைக்குச் சொந்தமான 'சியாமா செட்டி' குண்டு வீச்சு விமானம் ஒன்று நேற்றுத் தரையிறங்கிய போது விபத்துக்குள்ளானது.

அந்த விமானத்தில் இருந்த சிந்தக ரட்ணபால என்ற விமானப் பயிற்சியாளர் பலியானதாகவும்— வெல் ஹேவகே என்ற பயிற்சி பெறும் விமானி காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த விமானம் மறுசீரமைக்கப்பட்ட நிலையில் 1980 ஆம் ஆண்டில் இலங்கை அரசால் கொள்வனவு செய்யப்பட்டது. இதன் பெறுமதி சுமார் 20 இலட்சம் டொலர்கள் ஆகும்.

இந்த விபத்து தொழில்நுட்பக் கோளாறு காரணமாக அல்லது எரிபொருள் தீர்ந்ததால் அல்லது விமானியின் கவனயீனத்தால் நிகழ்ந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

இந்த ஆண்டில் விமானப்படைக்கு ஏற்பட்ட 6 ஆவது இழப்பு இதுவாகும்.

(இ-4-5-10-150-164)

## இலங்கை கடற்படையினருக்கு பிரெஞ்சுக் கப்பலில் பயிற்சி

கொழும்பு, ஜூன் 15

இலங்கை கடற்படையினருக்கு பிரெஞ்சுக் கப்பலில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இந்து சமுத்திரப் பிராந்தியத்துக்கு நல்லெண்ண விஜயம் மேற்கொண்டிருக்கும் பிரெஞ்சு கடற்படைக் கப்பலான 'லாசோனி'யில் இந்தப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

கொழும்புத் துறைமுகத்துக்கு கடந்த வாரம் வந்த இக் கப்பலில் இலங்கையின் 2 கடற்படை உத்தியோகத்தர்கள் 10 நாள் பயிற்சி பெற்று வருகிறார்கள்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 70 இலங்கையர்கள் ஆஸியில் சாகும்வரை உண்ணாவிரதம்

சிட்னி, ஜூன் 15

இலங்கையிலிருந்து ஆஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாகச் சென்றவர்கள் எனக்கருதப்பட்டு மீண்டும் இலங்கைக்கு அனுப்பப்பட உள்ள இலங்கையைச் சேர்ந்த 70 தமிழர்கள் சாகும் வரை உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் —

சிட்னி நகரிலுள்ள குடிவரவுத் தடுப்பு முகாமில் தடுத்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# அதி முக்கிய ஆயுத தளபாடங்களை வவுனியாவுக்கு மாற்ற நடவடிக்கை

## படையினரின் அடுத்த நகர்வு ஒரு வாரத்தில் ஆரம்பிக்கலாம்

கொழும்பு, ஜூன் 15

கடந்த செவ்வாயன்று புலிகளின் தாக்குதலுக்கு உள்ளான தாண்டிக்குளத்தில் உள்ள 55 ஆவது படையணியின் கட்டளைத் தலைமையகத்தில் உள்ள கனரக ஆயுதங்கள் மற்றும் முக்கிய ஆயுத தளபாடங்களை வவுனியாவுக்கு இடம் மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

கடந்த செவ்வாய்க்கிழமை தாண்டிக்குளம், நொச்சி மோட்டைப் பகுதிகள் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளானதும் —

அடுத்த நாள் படையினர் மீண்டும் அந்த இடங்களை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்ததும் தெரிந்தவையே.

இத் தாக்குதல் காரணமாக படை நடவடிக்கைகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள போதிலும் எதிர்வரும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கிளைமோர் தாக்குதலின் போது பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு

### இராணுவ வட்டாரம் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 15

வட்டுக்கோட்டையில் இடம்பெற்ற கிளைமோர் கண்ணிவெடித் தாக்குதலின் போது கொல்லப்பட்ட மற்றும் காயமடைந்த பொது மக்களுக்கு நஷ்டஈடு வழங்கப்பட்டதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன

இது தொடர்பாக இராணுவ வட்டாரங்கள் நேற்று விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வட்டுக்கோட்டையில்கிளைமோர் கண்ணிவெடியால் கொல்லப்பட்ட மற்றும் காயமடைந்த சாதாரண பொது மக்களின் உரித்தாளர்களுக்கு இராணுவத் தளபதி ஆர்.டி. எஸ். தளுவத்த அவர்களால் 12-06-1997 காலை 9.30 மணியளவில் யாழ்ப்பாணத்

[8 ஆம் பக்கம் பார்க்க]

## உலகின் முக்கிய தலை நகரங்களில் அரசின் செய்தித் தொடர்பாளர்கள்

### பிரசார நடவடிக்கையில் ஈடுபடுவர்

கொழும்பு, ஜூன் 15

வெளிநாடுகளில் புலிகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் பிரசாரங்களை முறியடிக்க இலங்கை அரசு உலகின் முக்கிய நகரங்களில் செய்தித் தொடர்பாளர்களை நியமிக்க உள்ளது:

லண்டன், ஒட்டாவா, புதுடில்லி மற்றும் பாங்கொக் ஆகிய இடங்களில் உள்ள இலங்கைத் தூதரகங்களிலேயே செய்தித் தொடர்பாளர் நியமிக்கப்படவுள்ளனர் என்றும்—

பத்திரிகைத் துறையைச்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நுணாவிலில் நான்கு படையினர் பலியானதாக அரசு அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 15

நுணாவில், கண்டி வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் 4 படையினர் பலியானதாகவும் 8 படையினர் காயம் அடைந்ததாகவும் கொழும்பு அரச தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

காயமடைந்தவர்கள் பலாலி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

படையினர் டிரக்கில் சென்று கொண்டிருந்தபோது இந்த தாக்குதல் நடத்தப்பட்டது தெரிந்ததே (இ-4)

### நேற்று மாலை யாழ். நகரில்

## கிரனேட் தாக்குதலில் 3 படையினர் காயம்!

### துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் பலி!!

யாழ்ப்பாணம், ஜூன் 15

யாழ். நகரில் மணிக்கூட்டு வீதி — பெருமாள் கோயிலுக்கு சமீபமாக உள்ள இராணுவ சோதனைச் சாவடிக்கு அருகில் நேற்று இடம்பெற்ற கிரனேட் தாக்குதலில் மூன்று படையினர் காயம் அடைந்தனர். அதனை அடுத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் கொல்லப்பட்டார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் சேவை

யாழ்ப்பாணம், ஜூன் 15

காங்கேசன்துறையில் இருந்து திருமலைக்கு 500 பயணிகளுடன் இன்று 'சஜிந்த' கப்பல் சேவை இடம்பெறவிருப்பதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

கப்பலில் பயணம் செய்யப் பதிவு செய்தவர்களை இன்று காலை 7.00 மணிக்கு யாழ். ரயில் நிலையப் பகுதிக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது; (ஐ)

## வெலிகந்த தாக்குதலின் போது ஆயுதங்களும் எடுக்கப்பட்டன.

### புலிகள் தரப்பில் மூவர் இழப்பு

வெலிகந்த, ஜூன் 15

நேற்று முன்தினம் பொலன்னறுவை மாவட்டம் வெலிகந்தவில் நாகஸதன்ன என்ற இடத்தில் இராணுவக் காவலரண் மீது தாம் மேற்கொண்ட தாக்குதலில் ஏ. கே. எல். எம். ஜி துப்பாக்கி— 1, அதற்குரிய மகஸின் — 3, அதற்குரிய லிங் — 267, ரி - 56 - 2 ரகத் துப்பாக்கிகள் — 3, ஏ. கே. மகஸின் — 10, நடுத்தர ரவைகள் — 475 ஆகியவை கைப்பற்றப்பட்டதாக 'புலிகளின் குரல்' வானொலி தெரிவித்தது.

இத்தாக்குதலின் போது மட்டக்களப்பைச் சேர்ந்த லெப். கிருஷ்ணவேல், லெப். வன்னியவதனன், வீரவேங்கை

( 8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஊர்காவற்றுறை - புளியங்கூடல்

## இந்தன் ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய

பூஜா மகோற்சவ ஹீன பிராயச்சித்த அந்தரீத

## பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம்

நிகழும் மங்களகரமான ஈசுர வருஷம் ஆனித் திங்கள் 2 ஆம் நாள் (16-06-97) திங்கட்கிழமை மு. ப. 11.53 — 1.23 வரையுள்ள ஏகாதசி திதியும் சித்திரை நட்சத்திரமும் சித்தாமிர்த யோகமும் கூடிய சுப வேளையில் கும்பாபிஷேகம் நடைபெற்று. பிற்பகல் 2.00 மணிக்கு விசேட பூஜையும் சுவாமி வீதி உலாவரும் காட்சியும் நடைபெறும்.

அத்தருணம் அடியார்கள் அனைவரும் வருகை தந்து விநாயகப் பெருமானின் இஷ்ட சித்திகளைப் பெற்றேகுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

பிரதிஷ்டா பிரதம குரு

கிரியா சிரோரத்தினம் சிவஸ்ரீ சோ. வரதராசக் குருக்கள்

சர்வ போதகம்

சிவ ஆகம ஞானபாஸ்கரன், சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள்

சர்வ சாதகம்

சோ. சிவபாலசர்மா, பா. சர்வேஸ்வரக் குருக்கள்

- விழா உபயகாரர்.

புளியங்கூடல்,
ஊர்காவற்றுறை.

(47811)



மீண்டும் ஆரம்பம்!

## விஸ்கம்

மானிப்பாய் மருதடி பிள்ளையார் கோயிலடியில்

சகலவிதமான மெலிபன் பிஸ்கட் வகைகள்,
சொக்லட் வகைகள்,
சோடா வகைகள், சிகரட் வகைகள்,

பாட்டா (றபர் பாதஅணிகள்)

அனைத்தும் நியாய விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

## விஸ்கம்

மருதடி விநாயகர் கோயிலடி, மானிப்பாய். (சி/940)



## எமது நேற்றைய வெளியீடுகள்

ராஜ்கிரன், மீனா நடித்த

() பாசமுள்ள பாண்டியரே

சிரஞ்சீவி, சௌந்தர்யா நடித்த

() சிப்பாய்

ஓடியோ CD வெளியீடுகள்

- ★ தேவதை
- ★ காதல் ரோஜாவே
- ★ அன்பே உனக்காக
- ★ உன்னையே கல்யாணம் பண்ணிக்கிறேன்

## சுப்பஸோ வீடியோ

100A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/941)


## பௌதிகவியல் கருத்தரங்கு

வலயம் - I, II

**இடம்:-** இந்துக் கல்லூரி (ஆண்கள்),
இந்துமகளிர் (பெண்கள்)

**காலம்:-** திங்கள் முதல் வியாழன் வரை. (8-30 — 2-30)

**அலகு:-** இலத்திரனியல், சடமும் கதிர்ப்பும், X கதிர், கதிர்த் தொழிற்பாடு, ஒளி மின் விளைவு.

**வளஅணியினர்:-** திரு. வ. சூரியநாதன்,
திரு. இ. இரவீந்திரநாதன்.

புதிய பாடத்திட்டப்படி 1997 இல் தோற்றும் மாணவர்களும், ஆசிரியர்களும் மாத்திரம் கலந்து கொள்ளவும்.

கல்விப்பணிப்பாளர்கள்.

(47812)

## முக்கிய அறிவித்தல்

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## O/L DAY CLASS

பிரிவு 3 14-06-1997 ஆரம்பமாகும் எனத் தவறுதலாக அறிவிக்கப்பட்டது. அந்த வகுப்பு 16-06-1997 (திங்கள்) ஆரம்பமாகும் என்பதை மாண வர்களுக்கு அறியத்தருகின்றோம்.

நிர்வாகி

(47814)

## தேங்காய் திருடர்

திருட்டுத்தனமாக தேங்காய் பிடுங்கச் சென்றவர்கள் தென்னந்தோட்ட உரிமையாளரைத் தாக்கினர்.

கொடிகாமத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் தம்பிஐயா சேனாதிராசா (வயது65) என்பவரே படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த சில நாள்களாக இரவுவேளையில் தேங்காய் திருட்டு இடம்பெற்று வந்ததாகவும் —

சம்பவதினம் தென்னந்தோட்டத்துக்கு காவலுக்குச் சென்ற வேளை மரத்தில் இருந்து இறங்கி வந்த திருடன் ஒருவன் பொல்லினால் தாக்கிவிட்டு தப்பிச் சென்றுவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-15)

## ஆஸ்பத்திரிக்குள் நுழைந்த பாம்பு!

யாழ். போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவுக்குள் நுழைந்த பாம்பு ஒன்றினால் அப் பகுதியில் பெரும் பரபரப்பு நிலவியது.

நேற்று முன்தினமிரவு நுழைந்த இந்தப் பாம்பு நேற்றுக் காலையே அடித்துக் கொல்லப்பட்டது.

வெளி நோயாளர் பிரிவில் இரவுக் கடமைக்கு வந்த டாக்டர் ஒருவர் தமது அறையைத் திறந்து உள் நுளைந்த போது இந்தப் பாம்பு அங்கு காணப்பட்டது அங்கு கடமையில் இருந்த ஊழியர்கள் சிலர் அந்த அறைக்குள் புகுந்து பாம்பை அடிக்க முயற்சித்தும் அது பலனளிக்கவில்லை.

இரவு பூராகவும் அவர்களை கலக்கத்திற்கு உள்ளாக்கிய அந்தப் பாம்பு நேற்று அதிகாலையே அடித்துக் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (இ-4-15)

## வைபவம்

யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமையன்று மூன்று இறைபணியாளர்கள் யாழ்.மறை மாவட்ட ஆயர் அதிவண தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையினால் திருநிலைப்படுத்தப் படவுள்ளனர்:

செ. ஜோ. சனிஸ்ரன், றெனோல்ட் அ. ஜோர்ச், சே. வி. ஜேம்ஸ் ஆகியோரே இறைவனின் பணியாளர்களாக (குருமாராக) திருநிலைப்படுத்தப்படவுள்ளனர். (ஐ-135)

## விளையாட்டு நிகழ்வு

கொக்குவில் மத்திய கிரிக்கெட் கழகம் நடத்தும் 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் முதலாவது அரை இறுதி ஆட்டம் இன்று ஞாயிறு காலை 8.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும் இப் போட்டியில் கொக்குவில் மத்திய கிரிக்கெட் கழக அணியை எதிர்த்து மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக் கழகம் மோதும். (ஐ)

## கிராமிய வங்கியில் ஓய்வூதியம்

திருநெல்வேலி, ஜூன் 15

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவு சங்க கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுபவர்களது ஜூன் மாதத்தின் கொடுப்பனவு நாளை திங்கட்கிழமை வழங்கப்படவுள்ளது. (ஐ-135)

## சின்னம் சூட்டும் விழா

யாழ்ப்பாணம், ஜூன் 15

மட்டுவில் தெற்கு அ. மி. த. க. பாடசாலையில் மாணவ தலைவர் அமைப்பு முறை உருவாக்கப்பட்டு [illegible] சூட்டும் விழா அண்மையில் அங்கு நடைபெற்றது. (ஐ)

## பல் சிகிச்சை இயந்திரங்களை இயங்க வைப்பதில் தாமதம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

யாழ். போதனா வைத்தியசாலையின் பல் சிகிச்சைப் பிரிவுக்கென அனுப்பி வைக்கப்பட்டுள்ள இயந்திர சாதனங்கள் அங்குள்ள சில வசதிக் குறைவுகள் காரணமாக இன்னும் பொருத்தப்படவில்லை.

இந்த இயந்திரங்கள் செயற்பட 'டிஸ்ரில் வாட்டர்' முக்கியபங்கை வகிப்பதால் இதற்கென தனியான தண்ணீர் தாங்கி ஒன்றை அமைத்து, அதில் டிஸ்ரில் வாட்டரைச் சேகரித்தே இந்த இயந்திரங்களை செயற்படுத்த வேண்டி உள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (இ.15)


## பிரதிகளுக்கு முந்துங்கள்

அண்மையில் வெளிவந்த

தென் - இந்திய வார - மாத சஞ்சிகைகள்

விற்பனையாகின்றன.

## ஸ்ரீலங்கா புத்தகசாலை

234, கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(47816)


பச்சிலைப்பள்ளி
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
பளை.

## அறிவித்தல்

சகல அங்கத்தவர்களுக்கும்,

அங்கத்துவ பட்டியல் முடிவுறுத்தல்: **30 – 06 – 97**

மேற்படி சங்கத்தின் கிளைக் குழுத் தேர்தலை நடத்துவதற்காக சகல கிளைகளிலும் உள்ள அங்கத்துவ இடாப்புக்கள் **30 — 06 — 97** உடன் முடிவுறுத்தப் படவுள்ளது. ஒரு பங்கின் பெறுமதி ரூபா நூறாகும் (100/-) எனவே முழு அங்கத்தவ பங்குப் பணத்தைக் கொண்டிராத அங்கத்தவரிடம் இருந்து மீதிக் பங்குப் பணத்தை **30 — 06 — 97** வரை ஏற்றுக்கொள்ளப் படும் என்பதை அறியத் தருகின்றோம். கிளை நிலையங்களில் பங்குப் பணத்தைச் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளலாம்.

முக்கிய குறிப்பு:

**30 — 06 — 97** க்குப் பின்னர் செலுத்தப்படும் பங்குப் பணங்களுக்குரிய அங்கத்தவர்களது பெயர்கள் கிளைக் குழுக் தேர்தலுக்கான அங்கத்துவ பட்டியலில் இடம்பெறமாட்டாது. எதிர்வரும் கிளைக் குழுத் தேர்தல் **30-06-97** இல் உள்ள அங்கத்தவர் பட்டியலின்படி நடைபெறும்.

சி. சுந்தரலிங்கம்,
தலைவர்.

ச. யோகராசா,
செயலாளர்.

(சி/942)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை

**திருமதி கிருபா பவசிங்கம்**

அவர்களின் அருமைத் தந்தையார்

## செல்லையா வல்லிபுரம்

(இளைப்பாறிய அதிபர்)

அவர்கள் 12-06-97 இல் இறைபதம் எய்தினார் அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

ஆசிரியர் கழகம்
மானிப்பாய் இந்துக் கல்லூரி,
மானிப்பாய்.

(47276

## மரண அறிவித்தல்

## செல்லையா வல்லிபுரம்

(இளைப்பாறிய அதிபர்)

செல்லையா வல்லிபுரம் அவர்கள் 12-06-97 முற்பகல் 10.00 மணிக்கு கர்த்தருக்குள் ஒன்றாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற ஆசிரியை பாக்கியத்தின் அன்புக் கணவரும், திருமதி கிருபாநிதி பவசிங்கம் (யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி), தயாகரன், திருச்சுதன் (கனடா), சாந்தி, அருளி, சாந்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும் பவசிங்கம், சுஷாந்தராசா, மனோ, றஜி ஆகியோரின் மாமனாரும் திரு. திருமதி சாரங்கபாணி, திரு. திருமதி தங்கராசா ஆகியோரின் மாமனாரும் ஷர்மிலி, கோஷலி, வென்ஜபின், ஏன்ஜலின், ஐவன், நோயல், சஹான், செமறா, செகாந், ஜோய், விஜி, சுகந்தி ஆகியோரின் பேரனும், திசோனின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று 15-06-97 பிற்பகல் 1.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சாந்தி வல்லிபுரம்
(மகள்)

தேவாலய வீதி,
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

(47813)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுடில்லியில் திரையரங்கில் பெரும் தீ!

## 70 பேர் மரணம்

புதுடில்லி, ஜூன் 15

புதுடில்லியில் உள்ள சினிமாத்திரை அரங்கு ஒன்றினுள் நேற்று முன்தினம் திடீரென ஏற்பட்ட பெரும் தீவிபத்தினால் குறைந்தது 70 பேர் உயிரிழந்தனர்; சுமார் 100 பேர் படுகாயமடைந்தனர்.

திரையரங்கின் ஒருபகுதியில் அமைந்துள்ள மின் மாற்றி ஒன்றில் இருந்தே தீ பரவியதாகவும்—

தீயினால் பரவிய பெரும் புகை மூட்டம் திரையரங்கினுள் நிறைந்ததால் மூச்சுத் திணறிப் பலர் உயிரிழந்ததாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

''போடர்'' (எல்லை) எனப்படும் திரைப்படத்தின் முதல் காட்சியைப் பார்க்கமுழு அளவில் ரசிகர்கள் அங்கு நிறைந்திருந்தனர்.

1971 இல் நடைபெற்ற இந்திய-பாகிஸ்தான் போர்க் காலப் பகுதியைப் பின்னணியாகக் கொண்டு இத் திரைப்படம் தயாரிக்கப்பட்டிருந்தது.

'பல்கனி' பகுதியில் இருந்த ரசிகர்களே இத் தீயினால் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

தஞ்சை பெரிய கோயிலில் நடந்த தீ விபத்தைத் தொடர்ந்து இந்தியாவில் தீ அனர்த்தங்கள் தொடர்பான விவகாரம் பரவலான கவனத்தை ஈர்த்துள்ள சமயத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

ஐந்து மாடிகளைக் கொண்ட இந்தத் திரையரங்கின் அடித்தளத்தில் நிறுத்தப்பட்டிருந்த கார்கள், ஸ்கூட்டர்களில் முதலில் பற்றிய தீ பின்னர் கட்டடங்களில் பரவியது.

தீ பரவிய வேளை திரையரங்கில் சுமார் ஆயிரம் பேர் திரண்டிருந்தனர்.

கடந்த வாரம் பெங்களூரில் நடந்த தேசிய விளையாட்டுப் போட்டிகளில் இரு தங்கப்பதக்கங்களை வென்ற கப்டன் எம். எஸ் பிஞ்ஜேர் இத் தீவிபத்தில் உயிரிழந்தார்.

இத் தீவிபத்து தொடர்பாக மஜிஸ்திரேட் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும்—

திரையரங்கின் நிர்வாகிகள் நால்வர் விசாரணைக்குட்படுத்தப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ-5)

# கைத்துப்பாக்கி பாவனைக்கு தடை

லண்டன், ஜூன் 15

பெரிய அளவிலான கைத்துப்பாக்கிகளைப் பொதுமக்கள் பயன்படுத்துவதற்கு பிரிட்டனில் தடை விதிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஜூலை முதல் திகதியில் இருந்து இந்தத் தடை அமுலுக்கு வரும்.

தடையை அடுத்து சுமார் ஒரு லட்சத்து 60 ஆயிரம் கைத்துப்பாக்கிகள் பொதுமக்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட உள்ளன. இதற்கான நஷ்டஈடு அவர்களுக்கு வழங்கப்படும். (ஐ)

# தஜிகிஸ்தான் எல்லையில் 30 பேர் பலி

மொஸ்கோ, ஜூன் 1

முன்னாள் சோவியத் நாடான தஜிகிஸ்தானில் ஆப்கானிஸ்தான் எல்லையோரத்தில் 30 பேரை ரஷ்ய இராணுவம் சுட்டுக் கொன்

## உலக அரங்கில்

றுள்ளது.

தஜிகிஸ்தான் அரசுக்கு எதிரான ஆயுதம் தாங்கிய இவர்கள் எல்லைப் பகுதியைக் கடந்த சமயம் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று ரஷ்ய இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)

# நேபாள அமைச்சர் ராஜினாமா

காத்மண்டு, ஜூன் 15

நேபாள வெளிவிவகார அமைச்சர் பிரகாஷ் சந்திர லொஹானி தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தல்களில் ஆளும் கூட்டணியில் இடம்பெற்றுள்ளகம்யூனிஸ்ட் கட்சியினர் ஊழல்கள புரிந்ததாக இவர் குற்றஞ்சாட்டியுள்ளார். (ஐ)

# கெமரூச் அணி பிளவுண்டது! பொல்போட் தப்பி ஓட்டம்!!

## கம்போடிய எல்லையில் கடும் சண்டை

நொம்பென், ஜூன் 15

கம்போடியாவின் 'கெமரூச்' கெரில்லாக்களின் பிரபல்யம் மிக்க தலைவரான பொல்போட் நாட்டை விட்டுத் தப்பிச் சென்றுவிட்டதாக உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனை உறுதி செய்வதற்காக 'கெமரூச்' கெரில்லாக்களின் 'கோட்டை' எனக் கருதப்படும் பகுதிக்கு கம்போடியத் துருப்புக்கள் விரைந்துள்ளன.

பொல்போட்டுக்கு ஆதரவான அணியினருக்கும், பிரிந்து சென்ற போட்டிக் குழுவினருக்கும் இடையே நேற்று முன்தினம் காலை சண்டை மூண்டதாக கம்போடிய அரச அதிகாரிகள் தெரிவித்தனர். மேலதிக விபரங்கள் எதுவும் வெளியாகவில்லை.

'கெமரூச்' தலைவர் பொல்போட் கம்போடியாவின் கிழக்குப் பகுதியில் உள்ள காட்டுக்குள் தப்பி ஓடித் தலைமறைவாகியுள்ளார் என்றும்—

பொல்போட்டுக்கு ஆதரவான கெரில்லாக்கள் எதிரணியினரின் 3 உயரதிகாரிகளைப் பணயக் கைதிகளாகப் பிடித்துள்ளனர் என்றும் மற்றொரு செய்தி தெரிவித்தது.

தனது பாதுகாப்புக்குப் பொறுப்பான தளபதி ஒருவரைக் கொன்றுவிட்டு தாய்லாந்து எல்லையோரம் இருந்த கெரில்லாக்களின் தளத்தை விட்டு பொல்போட் தனது 100 சகாக்களுடன் வெளியேறிவிட்டார் என்றும்—

அதன் பின்னரே கெமரூச் கெரில்லாக்களுக்கு இடையே சண்டை மூண்டதாகவும் கம்போடியப் பிரதமர் இளவரசர் நொரேடம் தெரிவித்தார்.

கெமரூச் இயக்கத்துக்குள் உட்பூசல்கள் கிளம்பியிருப்பதாக கடந்த சில நாள்களாக வெளிவந்த தகவல்கள் இதன் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

கம்போடியாவின் தேசிய அரசியல் நீரோட்டத்தில் கலந்துகொள்வது தொடர்பான போட்டி, பூசல்கள், கருத்து மோதல்கள் என்பன காரணமாகவே கெமரூச் இயக்கம் பிளவுபட்டுள்ளது.

70 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் கம்போடியாவில் கெமரூச் கெரில்லாக்கள் நடத்திய போராட்டத்தில் சுமார் 10 லட்சம் பேர் பலியாகினர்.

# ஒக்லஹோமா குண்டுவெடிப்பு; திமொதிக்கு மரணதண்டனை

## நச்சு ஊசி ஏற்றிக் கொல்லப்படுவார்

அமெரிக்காவின் வரலாற்றில் மிக மோசமான படுகொலைச் சம்பவம் என விவரிக்கப்படும் ஒக்லஹோமா நகர குண்டு வெடிப்புச் சம்பவத்தின் சூத்திரதாரியான திமொதி மெக்வெய்க்கு (வயது 29) மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.

ஊசி மூலம் நச்சு மருந்து ஏற்றப்பட்டு இவருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்படும்.

அரச கட்டடம் ஒன்றைத் தகர்த்தெறிந்து அமெரிக்காவை உலுக்கிவிட்ட இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 168 பேர் உயிரிழந்தனர்; சுமார் 500 பேர் காயமடைந்தனர்.

இரண்டு நாள்களில் 11 மணிநேரம் இடம்பெற்ற வாதப்பிரதிவாதங்களின் முடிவில் 7 ஆண்களும், 5 பெண்களும் அடங்கிய சட்ட நிபுணர்களின் தீர்ப்பை நீதிபதி அறிவித்தார்.

குண்டு வெடிப்பினால் பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையானோர் நீதிமன்றத்தில் குழுமியிருந்தனர்.

அமெரிக்க வீதிகளில் இரத்த ஆறு ஓடுவதை பார்க்க விரும்பியே இச் செயலைப் புரிந்ததாகக் கூறிவந்த திமொதி வளைகுடா யுத்தத்தில் சிறப்பாகப் பணியாற்றியதற்காக அமெரிக்க அரசினால் கௌரவிக்கப்பட்ட படைவீரர் ஆவார். (ஐ-5)

# ஆயுத சோதனை; ஐ.நா.-ஈராக் முரண்பாடு

நியூயோர்க், ஜூன் 15

ஈராக் வசமுள்ள ஆயுதங்களைச் சோதனையிடச் சென்ற ஐ. நா. அதிகாரிகளை ஆயுதம் தாங்கிய ஈராக் காவலர்கள் தடுத்ததாகக் கூறப்படும் சம்பவத்தைத் தொடர்ந்து ஐ. நாவுக்கும் ஈராக்கிற்கும் இடையே முறுகல்நிலை வலுத்துள்ளது.

ஐ. நா. அதிகாரிகளது ஆயுதசோதனையைத் தடுத்து நிறுத்துவது என ஈராக் அரச உயர் மட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டிருப்பதாக ஐ. நா. சபை குற்றஞ்சாட்டியுள்ளது.

ஐ. நா. அதிகாரிகளுடன் ஒத்துழையாத தன்மையை ஈராக் கடைப்பிடிப்பதாக கடந்த காலங்களில் குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டு வந்தன.

தற்போது இது தொடர்பான நெருக்கடி நிலை அதிகரித்து வருகிறது. (ஐ)

# டயானாவின் படம் குறித்து விசாரணை

பிரிட்டிஷ் இளவரசி டயானாவின் நிர்வாணப் படம் ஒன்று 'இன்ரநெற்றுக்கு' விடப்பட்டது குறித்து பிரிட்டிஷ் பொலிஸார் விசாரணை நடத்தி வருவதாக 'லண்டன் மிரர்' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

ஸ்பெயின் தீவு ஒன்றில் தங்கியிருந்தபோது குளிக்கும் தொட்டியில் டயானா அமர்ந்திருந்த சமயம் இப்படம் எடுக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

# பிரெஸ்ஸவிலில் அமைதி பேண அமெரிக்கா வேண்டுகோள்

பிரஸ்ஸவில், ஜூன் 15

கொங்கோ பிரஸ்ஸவிலின் அதிபர் பஸ்கால் லிசூபா அறிவித்த யுத்த நிறுத்தக் கோரிக்கைக்கு செவிசாய்க்குமாறு முன்னாள் அதிபரும், எதிரணிப் படைகளின் தலைவருமான டெனிஸ் சாசூ எங்கியூஸோவை அமெரிக்கா கேட்டுள்ளது.

கொங்கோ பிரஸ்ஸவிலில் சண்டையில் ஈடுபட்டுள்ள எல்லாக் குழுக்களும் ஆயுதங்களைக் கீழே போட்டு விட்டு ஜனாதிபதியின் யுத்த நிறுத்தத்தைப் பின்பற்ற வேண்டும் என்று அமெரிக்க ராஜாங்க அமைச்சின் பேச்சாளர் நிக்கலஸ் பேர்ன் தெரிவித்தார்.

இதேவேளை—

அமெரிக்காவின் இந்த வேண்டுகோளை முன்னாள் ஜனாதிபதி டெனிஸ் சாசூ ஏற்றுக் கொண்டுள்ளார். யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிக்குமாறு அவர் தமது ஆதரவுப் படையினரிடம் கோரியுள்ளார். (ஐ)

# புலிகளைப் பாதுகாக்கும் தீர்மானம்

லண்டன், ஜூன் 15

உலகில் அருகிவரும் விலங்கினங்களில் ஒன்றான புலிகளைப் பாதுகாக்க உடனடியான செயற்றிட்டம் ஒன்று வகுக்கப்படவேண்டும் என்று ஐரோப்பிய நாடாளுமன்றம் இந்தியாவிடம் வலியுறுத்திக் கேட்டுள்ளது.

லண்டனில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் இது தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சீனாவில் தயாரிக்கப்படும் சுதேச மருந்துகளில் புலிகளின் எலும்புகள் பயன்படுத்தப்படுகின்றன. இது தொடர்பான வர்த்தகம் மும்முரமாக நடப்பதால் இந்தியாவில் இருந்து புலிகள் சீனாவுக்கு கடத்தப்படுகின்றன.

சிம்பாப்வே தலைநகர் ஹராரேயில் நடைபெறும் அழிந்துவரும் விலங்கின வர்த்தகம் தொடர்பான மாநாட்டில் புலிகள் [illegible] பற்றி விவாதிக்கப்படவுள்ளது. (ஐ)

# பிரிட்டன் தயார்

இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையேயான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு மத்தியஸ்தம் வகிக்கத் தயார் என பிரிட்டன் தெரிவித்துள்ளது.

இந்தியாவுக்கு விஜயம் செய்த பிரிட்டிஷ் அமைச்சர் டெரெக் இத்தகவலை புதுடில்லியில் வெளியிட்டார்.

# பங்களாதேஷில் படகு கவிழ்ந்து 50 பேர் பலி!

டாக்கா, ஜூன் 15

பங்களாதேஷின் வடகிழக்குப் பகுதியில் நேரிட்ட படகு விபத்து ஒன்றில் குறைந்தது 50 பேர் உயிரிழந்து விட்டதாக அஞ்சப்படுகிறது.

250 பேரை ஏற்றிச் சென்ற படகு நேற்றோகோனாவின் கிழக்குப்பகுதியில் நதி ஒன்றில் கவிழ்ந்தது.

நீரில் மூழ்கியோரில் சிலர் நீந்திக் கரை சேர்ந்தனர். மேலும் பலர் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர். (ஐ)

# இந்தியா - பாகிஸ்தான் வியாழனன்று பேச்சு

புதுடில்லி, ஜூன் 15

இந்தியாவுக்கும் - பாகிஸ்தானுக்கும் இடையே வெளியுறவு மட்டத்திலான பேச்சு வார்த்தைகள் எதிர்வரும் வியாழனன்று மீண்டும் நடைபெறவுள்ளன.

பாகிஸ்தான் எல்லைக்கு அருகே இந்தியா தனது பிருதுவி ஏவுகணைகளை நகர்த்தி வருவதாக அமெரிக்காவின் 'வாஷிங்டன் போஸ்ட்' பத்திரிகை தகவல் வெளியிட்டதை அடுத்து—

இருநாடுகளுக்கும் இடையே பதற்றமான நிலைமை உருவாகியுள்ள சூழ்நிலையில் இந்தப் பேச்சுக்கள் நடைபெறவுள்ளன.

பாகிஸ்தான் எல்லைகளில் இந்தியா ஏவுகணைகளை நகர்த்தி வருவதாகக் கூறப்படுவதை பிரதமர் ஐ. கே. குஜ்ரால் மறுத்துள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# VACANCIES

Wanted for Mc Leod Hospital, Inuvil
M. B. B. S. Doctor and R. M. P

Salary — Negotiable

Apply before **30 - 06 - 1997**

**The Medical Superintendent,**
**Mc Leod Hospital,**
**INUVIL.**

(47802)



# விலை குறைப்பு

16 - 06 - 97 முதல் எமது ஸ்தாபனத்தில் தற்காலிகமாக விலை குறைப்புச் செய்யப்பட்டுள்ளது.

ரூபா 3.50 இல் இருந்தும் போட்டோ பிரதி செய்து கொள்ளலாம். அடையாள அட்டைகளை ரூபா 20.00 இல் இருந்து கவரிட்டும் பெற்றுக் கொள்ளலாம்.

**கிளீன்கட்**

பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

(47806)


# 33ஆம் நாள் நினைவஞ்சலி

| மண்ணில்: | விண்ணில்: |
|---|---|
| 22 | 14 |
| 10 | 05 |
| 1921 | 1997 |



## திருமதி தவமணி கந்தையா

வார்த்தையிலே வன்சொல் இன்றி அமைதியே உருவான எங்கள் அன்புத் தாயாரின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (15 - 06 - 97) அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியைகளிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்

12/23, கன்னாதிட்டி ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (47791)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 07 | 16 |
| 05 | 05 |
| 1930 | 1997 |



## உயர்திரு நல்லசேகரம் நடராசா

கண்ணியெலமைக் காத்தளித்த கருமவீரா!
கண்விழித்து வளர்த்தெடுத்த கடமைத்தீரா!
மண்ணதிலே மாண்புசொன்ன மகிமை மன்னா!
மாசற்ற நடராசப் புகழ்சால் வன்னா!
எண்ணாமல் லெவமவிடுத்து எங்கே யுற்றாய்?
ஜென்மங்கள் கண்ணில் நீர் ஏனோ தந்தாய்?
பண்சுமந்த உன் புகழை உன்னி உன்னி
பாருள்ள வரையுந்தன் நினைவில் வாழ்வோம்.

ஓம் சாந்தி!

- குடும்பத்தினர்

சரசாலை. (சி/926)

# விதைவெங்காயம் பெற பதிவுசெய்ய கோரிக்கை

தென்மராட்சி, ஜூன் 15

தென்மராட்சிப் பிரதேசத்தில் சின்ன [வெங்காயம் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு விதை வெங்காயம் பெற்றுக் கொடுக்க மீசாலை கமநல சேவைகள் திணைக்கள பெரும்பாக அலுவலரினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

விதை வெங்காயம் தேவைப்படும் விவசாயிகள் அலுவலகத்தில் தமக்குத் தேவையான விதைவெங்காயத்தினைப் பெற்றுக்கொள்ள பதிவு செய்யுமாறு பெரும்பாக அலுவலர் அறிவித்துள்ளார். (ஐ-117)

# ஆஸ்பத்திரியை பார்வையிட்டனர்

வடமராட்சி, ஜூன் 15

வரணி அரசினர் கிராமிய வைத்தியசாலையில் சேதமடைந்த பகுதிகளை யாழ். பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுப் பிரதிநிதிகள் ஆகியோர் அண்மையில் பார்வையிட்டனர்.

கடந்த மாதப் பிற்பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தில் ஷெல் வீச்சினால் இவ் வைத்தியசாலையின் மருந்துக் களஞ்சியமும், ஏனைய சில பகுதிகளும் சேதமடைந்திருந்தன. (ஐ-173)


**N. C. A.**
**கல்வி நிறுவனம்**
**பருத்தித்துறை**
**O/L துரித மீட்டல்**
**DAY CLASS**
ஆரம்பமாகி விட்டது
**நெல்லியடியில்**
**சயன்ஸ் அக்கடமி**
(47789)


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.**

**யாழ். பல்கலைக்கழகத்துக்கு மருந்துவகைகளை வழங்குவதற்கான கேள்விப்பத்திரம் கோரப்படுகிறது.**

1. கேள்விப்பத்திரதாரர் யாழ். பல்கலைக்கழக உதவி நிதியாளர் வழங்களுடன் தொடர்பு கொண்டு பல்கலைக்கழகத்துக்குத் தேவையான மருந்து வகைப்பட்டியலை அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.
2. கேள்விப்பத்திரதாரர் தமது கூறு விலைப் பட்டியலை 97-06-21 காலை 10 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக தபால் உறையின் இடது புறத்தில் UJ 20/07/97 என எழுதப்பட்டு நிதியாளர், நிதிக்கிளை, யாழ். பல்கலைக்கழகம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.
12 - 06 - 1997

(சி-931)

# யுத்தத்தில் தற்போது மிக மோசமான நிலை

## மன்னார் ஆயர் கவலை

வவுனியா, ஜூன் 15

கடந்த 15 வருட கால யுத்தத்தில் மிக மோசமான நிலை தற்போது ஏற்பட்டுள்ளது என்று மன்னார் ஆயர் அதிவந். இராயப்பு யோசப் தெரிவித்துள்ளார்.

இடம் பெயரும் மக்கள் அவலம் குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இப்படித் தெரிவித்துள்ளார்.

இடம் பெயர்வால் மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர். உணவு நெருக்கடி நிலையில் அவர்கள் இன்னற்படுகிறார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-3)

# 50 சத முத்திரை இல்லை

கொழும்புத்துறை, ஜூன் 15

யாழ். குடாநாட்டில் உள்ள அனேக தபாலகங்களிலும், உபதபால் அலுவலகங்களிலும் தபால் அட்டைகள், 50 சத முத்திரைகள் என்பவற்றுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது.

சில தபாலகங்களில் 20 ரூபா, 10 ரூபா போன்ற விலை கூடிய முத்திரைகளுக்கும் தட்டுப்பாடு நிலவுகின்றது. (ஐ-30)

# கொழும்பு செல்லும் நோயாளருக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 15

மேலதிக சிகிச்சைக்காக கொழும்புக்கு நோயாளர்களை அழைத்துச் செல்லும் பணியை செஞ்சிலுவைச்சர்வதேசக் குழு மீண்டும் ஆரம்பித்துள்ளது.

எனவே வைத்திய நிபுணர்களால் மேலதிக சிகிச்சைக்கெனச் சிபார்சு செய்யப்பட்ட நோயாளர்களை நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரி பணிப்பாளரின் பணிமனைக்குச் சென்று தத்தமது விவரங்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ-15)

பொதுமக்கள் கவனத்திற்கு

# அறிவித்தல்

## விசேட அடையாள அட்டைகள்

மக்கள் குறைகேட்கும் நாள் நிகழ்ச்சி நிரல் தவிர்க்க முடியாத காரணங்களினால் பின்வரும் பிரதேச செயலகங்களில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

01. கரவெட்டி, பருத்தித்துறை பிரதேச செயலகங்களுக்கான புதிய திகதி **03 - 07 - 1997**.
02. வேலணை பிரதேச செயலகத்திற்கான புதிய திகதி **30 - 06 - 1997**.
03. ஊர்காவற்றுறை, நெடுந்தீவு பிரதேச செயலகங்களுக்கான புதிய திகதி **01 - 07 - 1997**.

மருதங்கேணி பிரதேச செயலகத்தில் 30-06-97 ஆம் திகதி நடக்கவிருந்த நிகழ்ச்சி பிற்போடப்பட்டுள்ளது. உரிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

தி. திருலிங்கநாதன்'
கருத்திட்ட முகாமையாளர்,
விசேட அடையாள அட்டைப்பிரிவு,
ஆட்பதிவுத் திணைக்களம்,
செயலகம், யாழ்ப்பாணம்.

(சி/939)

# ST. JOHN'S COLLEGE, JAFFNA.

**ANNUAL PRIZE GIVING 1997**
**Saturday the 28 th June, 1997**

At 9. 30 a m. (New Time)

**CHIEF GUEST:**
**Rt. Revd. Kenneth M. J. Fernando**
( Bishop of Colombo )
&
**Mrs. Chithra Fernando**

**CHAIRMAN:**
**Ven. J. S. Sarvanathan**
( Archdeacon - Jaffna )

Parents, Old Boys & Wellwishers are cordially invited.

**Principal, Staff and Students.**

(C/917)


முதலாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு
தரமான போட்டோஸ்ரற் பிரதிகள்
சிறியது 3-50 ஆகவும் பெரியது 8-00 ஆகவும் விலை குறைக்கப்பட்டுள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.
அடையாள அட்டைகளைக் கவரிடவும் நாடுங்கள்:

**கோல்டன் விங்**

154, நவீன சந்தை வெளிப்புறம்,
யாழ்ப்பாணம்.

(47805)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எத்தகைய சமாதான முயற்சிக்கும் அரசுடன் ஒத்துழைக்கத் தயார்!

## பி. பி. ஸிக்கு ரணில் பேட்டி

லண்டன், ஜூன் 15

''விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது குறித்து எமக்கு ஆட்சேபனை ஏதும் இல்லை. இது தொடர்பாக அரசு எடுக்கும் எந்த ஒரு சமாதான முயற்சிக்கும் எமது முழு ஒத்துழைப்பை வழங்குவோம்.''

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

பிரிட்டிஷ் பிரதமரின் அழைப்பை ஏற்று லண்டன் சென்றிருந்த ரணில் விக்கிரமசிங்க அங்கு வைத்து பி. பி. ஸிக்கு பேட்டி அளித்த போது முன் கண்டவாறு தெரிவித்தார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

★ கேள்வி:- இந்த வேளையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என நீங்கள் நினைக்கவில்லையா?

★ ரணில்:- விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வது சுலபமான காரியமல்ல. எனக்கு கிடைக்கும் தகவல்களின்படி பேச்சுவார்த்தை ஒன்றை ஆரம்பிப்பது குறித்துப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள விடுதலைப் புலிகள் விரும்புவதாகத் தெரிகிறது. பேச்சுவார்த்தை ஆரம்பித்தாலும் அது உடனடியாக முடிவுக்கு வர வாய்ப்பில்லை. அரசாங்கம் தான் முடிவான ஒரு கொள்கையைத் தீர்மானிக்க வேண்டும். 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையின் பின்னர் அடுத்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை பற்றி அரசாங்கம் முடிவெடுக்க வேண்டும்.

★ கேள்வி;- பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வது குறித்தும் யுத்தத்தை நிறுத்துவது குறித்தும் ஐ. தே. கட்சிக்கு உடன்பாடு உள்ளது எனக் கூறுகிறீர்களா?

★ ரணில்:- பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வது குறித்து எமக்குப் பிரச்சினையில்லை. அதுமாத்திரமன்றி இது தொடர்பாக எதிர்காலத்தில் மேற்கொள்ளவிருக்கும் எந்த ஒரு முயற்சிக்கும் ஒத்துழைப்பை வழங்க நாம் உடன்பட்டுள்ளோம்.

★ கேள்வி:- சமாதானத்திற்காகவே யுத்தம் நடத்துவதாக அரசு கூறுகிறது. இந்தப் பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலம் தீர்வு காண முடியாது என நீங்கள் நினைக்கிறீர்களா?

★ ரணில்:- இந்த யுத்தம் நீண்ட காலம் தொடரும் என நினைக்கிறேன். இதற்குத் தற்போது உடனடியாக முடிவு வரும் என்றும் நான் நினைக்கவில்லை. ஒரு புறத்தில் இராணுவம் முன்னேறும் போது மறுபுறத்தில் இராணுவம் வாபஸ் பெறப்படுகிறது. அப்போது அங்கு விடுதலைப்புலிகள் நுழைகிறார்கள் இதன்படி இது நீண்ட காலமெடுக்கும் யுத்தமென்றே எனக்குத் தோன்றுகிறது.

★ கேள்வி:- அரசாங்கம் கூறுவது போல் யுத்தமும் அரசியல் தீர்வு முயற்சிகளும் சமாந்தரமாக — சமகாலத்தில்— மேற்கொள்ளப்பட வேண்டும் என நீங்கள் நினைக்கிறீர்களா?

★ ரணில்:- யுத்தத்தை நிறுத்திவிட்டுப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதாயின் விடுதலைப் புலிகளுடனேயே பேசவேண்டும் என நாங்கள் கூறுகிறோம். வேறு அமைப்புகளுடன் பேசி தீர்வு காண முடியாது.

★ கேள்வி:- அரசாங்கம் யுத்தம் தொடர்பாகவும் அமைதி முயற்சிகள் தொடர்பாகவும் கவனம் செலுத்த வேண்டும் என நீங்கள் கருதுகிறீர்களா? இதற்குத் தெளிவான மாற்றுவழி என்ன? யுத்தம் நிறுத்தப்பட வேண்டுமா அல்லது தொடரப்பட வேண்டுமா? உங்கள் தெளிவான கருத்து என்ன?

★ ரணில்:- நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் இது பற்றி முதலில் ஆராய்வோம் என அரசு தெரிவித்தது. அதன் பின்பு விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள சந்தர்ப்பம் வழங்குமாறு எம்மிடம் அரசு கேட்டது. இவை யாவற்றிற்கும் எமது உடன்பாட்டைத் தெரிவித்துள்ளோம். ஆனால் உடனடியாக இவற்றை மேற்கொள்ளுமாறு அரசிடம் நான் கூறமுடியாது. விடுதலைப் புலிகளுடன் அரசு பேச்சுவார்த்தை மேற்கொள்வது தொடர்பாக எமக்கு எதுவித ஆட்சேபனையுமில்லை, அது அரசின் பொறுப்பாகும். அரசாங்கம் முதலில் பல்வேறு சக்திகளின் உடன்பாட்டைப் பெறவேண்டும்—என்றார். (ஐ-10)

## கப்பலில் உருளைக்கிழங்கு

தென்மராட்சி, ஜூன் 15

இரண்டு மாத இடைவெளியின் பின்னர் சாவகச்சேரி சந்தையில் உருளைக்கிழங்குகள் விற்பனைக்கு வந்துள்ளன.

கொழும்பிலிருந்து கப்பலில் சாவகச்சேரி தனியார் வர்த்தக நிறுவனத்துக்கு வந்துள்ள உருளைக்கிழங்கு ரூபா 70 ஆக விற்கப்படுகிறது.

கப்பல் வருகை தாமதத்தினால் பெருமளவு உருளைக்கிழங்குகள் பழுதடைந்த நிலையில் வந்துள்ளன, (ஐ-117)

### கொழும்பில் இருந்து கப்பல் மூலம்

## பொருள்களை எடுத்து வர சமாசத்திடம் நிதி இல்லை

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தியாளர் நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் போதிய நிதிவசதியின்மையால் இம்மாதம் கொழும்பில் இருந்து பொருள்களை எடுத்து வர மாட்டாது என்று சமாச வட்டாரங்கள் தெரிவித்தன.

சமாசத்தினால் கடந்த மாதம் ''மாஹேரா'' கப்பலில் எடுத்து வரப்பட்ட நுகர்ச்சிப் பொருள்கள் தற்சமயம் ப. நோ. கூ. சங்கங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன என்றும் —

அவை விற்று முடிந்ததும் அதன் மூலம் பெறும் நிதியில் இருந்து அடுத்த மாதமளவில் ''மாஹேரா'' கப்பலில் பொருள்கள் எடுத்துவரப்படும் என்றும் — அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ஐ-3)

## பனிக்கட்டி இயந்திரங்களை திருத்தி அமைக்க முயற்சி

யாழ்ப்பாணம், ஜூன் 15

வட மாகாண கடற்றொழிலாளர்கள் சங்கங்களின் சமாசம் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன. இரண்டு பனிக்கட்டி இயந்திரங்களை (ஐஸ் பிளாண்ட்) இயங்க வைப்பதற்கு முயற்சி எடுத்து வருகிறது.

மேற்படி இரு பனிக்கட்டி இயந்திரங்களுக்குமான உதிரிப்பாகங்கள் பல வடமாகாண கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்திடம் உள்ளன என்றும்—

இதனைத் திருத்தி மீண்டும் இயங்கவைப்பதற்கு 10முதல் 15 லட்சம் ரூபா வரை தேவைப்படும் என்றும்— தெரிவிக்கப்பட்டுள்ளது.

பனிக்கட்டி இயந்திரங்களை இயங்க வைக்கத் தேவையான நிதி உதவியைப்பெற அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்துடன் மேற்படி சமாசம் தொடர்புகொள்ள உள்ளது. (ஐ-5)

## சிறுபோக வெங்காயச் செய்கை அச்சுவேலிப் பகுதியில் மந்தம்

அச்சுவேலி, ஜூன் 15

வலிகாமம் பகுதியில் சிறுபோக வெங்காயச் செய்கை இம்முறை குறிப்பிடத்தக்களவு செய்கை பண்ணப்படவில்லை.

காலபோக வெங்காயப் பயிர்கள் பனிப்பூச்சித் தாக்கத்திற்கு உள்ளாகியதால் இடை நடுவில் பயிர்கள் அழிக்கப்பட்டன. இதனால் விவசாயிகள் பெருமளவில் நஷ்டம் அடைந்தனர்.

சிறுபோக வெங்காயச் செய்கை வழமையாக சித்திரை — வைகாசி மாத காலப் பகுதியில் நடைபெறும்.

வெங்காயச் செய்கை நடைபெறும் தோட்ட நிலங்கள் தற்போது வெறிச்சோடிக் கிடக்கின்றன.

விதை வெங்காயத்தின் விலை கணிசமான அளவு அதிகரித்து காணப்பட்டதும், காலநிலை முரண்பாட்டால் சிறுபோக வெங்காயப் பயிரும் பாதிக்கப்படலாம் என்ற அச்சமும் வலிகாமம் பகுதி விவசாயிகளை சிறுபோக வெங்காயச் செய்கையில் நாட்டங்கொள்ளச் செய்யவில்லை எனக் கூறப்படுகின்றது. (ஐ-11)

## உர வகைகள் விநியோகம்

தென்மராட்சி, ஜூன் 15

தென்மராட்சி பிரதேச விவசாயிகளுக்கு வழங்கவென அமோனியா, ரி. டீ. எம், வீ - 1 தென்னைஉரம், தேசி உரம் ஆகியவை மீசாலை கமநல சேவைகள் திணைக்களத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ளன.

உரவகைகள் தேவைப்படும் விவசாயிகள் கமநல சேவைகள் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாமென பெரும்பாக உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (ஐ-117)

## நியமனம

யாழ்ப்பாணம், ஜூன் 15

சட்டத்தரணியும், எழுத்தாளரும், தமிழ்ப்பத்திரிகையாளருமான திரு. பொன். பூலோகசிங்கம் இலங்கை நீதி அமைச்சினால் மத்திய ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் அண்மையில் யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி ஏ.என்.இராமச்சந்திரன் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து தமது கடமைகளைப்பொறுப்பேற்றுக் கொண்டார். இவர் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் சட்ட விரிவுரையாளராகவும் கடமையாற்றி வருகின்றார். (ஐ)

## திருத்தம்

பார்வை குறைபாடு உடையவர்களுக்கு சாவகச்சேரி லயன்ஸ் சழகம் மூக்குக் கண்ணாடிகளை வழங்கியது பற்றிய செய்தி 3. 6. 97 ஆம் திகதிய உதயனில் வெளியாகி இருந்தது.

இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மூக்குக் கண்ணாடிகளை வழங்கியவர் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி எஸ். ஏ. ஈ. ஏகநாதன் ஆவார். அவரது பெயர் எஸ். ஏ. ஜெகநாதன் என்று அச்சுத் தவறு ஏற்பட்டுவிட்டது. திருத்தி வாசிக்கவும். (அ)

## சமய சந்நிதிகளில்

இருபாலை கற்பகப் பிள்ளையார் கோயில் தேர்த்திருவிழா நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து 10 மணிக்கு சுவாமி தேரில் ஆரோகணிப்பார்.

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவம் இடம் பெறும். (ஐ)

★ ★ ★

அல்வாய் மாறாம்புலம் மாணிக்கப் பிள்ளையார் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 11 ஆம் திகதி ஆரம்பமானது.

பத்தாம் நாளான இம்மாதம் 20 ஆம் திகதி நடைபெறும் தீர்த்தோற்சவம் ஊர் உலா பவனியுடன் முடிவடையும். (ஐ-173)

★ ★ ★

மந்திகை அருள்மிகு ஸ்ரீ கண்ணகை அம்பாள் ஆலய ஏகதின இலட்சார்ச்சனையும் ஹோமமும் இம் மாதம் 23 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும். (ஐ-173)

★ ★ ★

நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோயில் 11 ஆம் திருவிழா நாளை திங்கட்கிழமையாகும். விசேட சங்காபிஷேகத்தைத் தொடர்ந்து வாயு பட்சணியுடன் கூடிய பூந்தண்டிகையில் அம்பாள் வீதியுலா இடம் பெறும்.

★ ★ ★

மன்னார்ப் பகுதியிலுள்ள யாத்திரைத் தலமான மருதமடு புனித செபமாலை அன்னையின் ஆடித்திருவிழா எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை மன்னார் ஆயர் கலாநிதி இராயப்பு யோசப் ஆண்டகை தலைமையில் கொடியேற்றத்துடன் 'ஆரம்பமாகும்.

அடுத்த மாதம் 2 ஆம் திகதி புதன்கிழமை திருவிழா நிறைவுபெறும். (ஐ-30)

★ ★ ★

கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆனி மாதப் பிறப்பை ஒட்டி காலை 6.00 மணிக்கு ''சங்கிராந்தி உற்சவம்'' நடைபெறும். (ஐ-30)

★ ★ ★

மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலி பூசையும், அதனை அடுத்து திருச்சுருப பவனியும் நடைபெறும்.

யாழ். ஆயர் இல்ல பரிபாலகர் அருட்திரு. செல்வராசா அடிகளார், மானிப்பாய் பங்குத் தந்தை அருட்திரு. எஸ். இயூஜின் அடிகளாரின் உதவியுடன் திருப்பலிப்பூசையை ஒப்புக்கொடுப்பார். (ஐ-135)

★ ★ ★

யாதகல் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. காலை 7 மணிக்கு திருப்பலியும், அதனை அடுத்து திருச்சுருப பவனியும் இடம்பெறவுள்ளன. (ஐ-135)

★ ★ ★

கொழும்புத்துறை ஆத்தியம்பதி ஸ்ரீ சந்திரசேகரர் விநாயகா ஆலயத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நாடு நலம் பெற, மக்கள் மன நிம்மதியுடன் வாழ இறை ஆசி வேண்டி ஆலய இந்து இளைஞர் மன்றத்தின் சார்பில் மாலை 3.30 மணி தொடக்கம் 4.30 மணி வரை பஜனை, கூட்டுப்பிரார்த்தனை, நற்சிந்தனை என்பன நடத்தப்பட்டு வருகின்றன.

## மினிபஸ் சேவை

திருநெல்வேலி, ஜூன் 15

யாழ்.நகரிலிருந்து பண்டத்தரிப்பு சந்தி வரை புதிதாக மினிபஸ் சேவை கடந்த வாரம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனால் பண்டத்தரிப்பு, சில்லாலை, வடலியடைப்பு, மாதகல் ஆகிய பகுதிகளிலுள்ள மக்களுக்கு போக்குவரத்து வசதி கிடைத்துள்ளது. (ஐ-135)

## அதிபர்களுக்கு அவசர கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

மாகாண மட்ட தமிழ்த் தினப் போட்டியில் கலந்து கொள்ளச் செல்லும் மாணவர்களின் போக்குவரத்து வசதி குறித்து கலந்துரையாடுவதற்காக வலயம் 1 பாடசாலைகளைச் சேர்ந்த சம்பந்தப்பட்ட அதிபர்களை நாளை முற்பகல் 10. 30 மணிக்கு யாழ். கன்னியர் மடம் மகாவித்தியாலயத்தில் சமுகமளிக்குமாறு கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

போட்டியில் பங்குபற்றவுள்ள மாணவரினதும், அவர்களுக்குப் பொறுப்பான ஆசிரியர்களினதும் பெயர், பிறந்த திகதி, அ. அட்டை இலக்கம், தனிப்பட்ட முகவரி போன்ற விவரங்களையும் தம்முடன் எடுத்து வருமாறு அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

இதே போட்டியில் பங்குபற்றச் செல்லும் வலயம் — 2 பாடசாலை மாணவர்களின் அதிபர்களுக்கான கலந்துரையாடல் கோப்பாய் மகா வித்தியாலயத்தில் நாளை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

மேற்கூறிய எல்லா விவரங்களுடனும் சம்பந்தப்பட்ட அதிபர்களை அங்கு சமுகமளிக்குமாறு வலயம் — 2 கல்விப்பணிப்பாளரும் அறிவித்துள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

தேநீர்க் கடைக்குத் தேவையான 2 சோக்கேஸ் மற்றும் சகலவிதமான தளபாடங்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு:- S. சுதர்சன் 150, சிவன் பண்ணை வீதி, கொட்டடி யாழ்ப்பாணம். (சிற்றி (Boy) போய் ரெயிலர் முன்னால்) [47759]

நல்ல நிலையிலுள்ள பாவித்த ரீயூட்டரி மேசை, வாங்குகள் என்பன உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:-எஸ் ஆர். கணேசராசா, ''செபவாசா'' அல்வாய் வடமேற்கு, அல்வாய். (மாணாண்டிச் சந்தைக்கு அருகாமையில்) [47796]

### இறைச்சிக்கோழி

புறோயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. சி. சிவசுரேஸ், 153. நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (மனோகரா தியேட்டர் அருகாமை). (47784)

### மணப்பெண்கள் தேவை

குறைவான பாவமுள்ள, 34-38 வயதுள்ள ஏழு ஆசிரியர்களுக்கு (பட்டதாரிகளும்) அழகான மணப்பெண்கள் தேவை. தொழிலுள்ளவருக்கு முன்னுரிமை. புகைப்படம், சாதகத்துடன் நேரில் காலை வேளையில் தொடர்பு; முத்துக்குமாரு செல்லப்பா, புன்னாலைக் கட்டுவன். [47786]

### சோதிடம்

எத்தகைய தீராத பிரச்சினைகளும் தீர, கல்வித்தடை, விவாகத் தடை, தொழில் தடை தீர ஆலோசனைகள் வழங்கப்படும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். ''பொய்யா மொழி'' சோதிடம், ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோயிலடி, 140, பருத்தித்துறை வீதி, நல்லூர். (47775)

### தவறிவிட்டது

தில்லைராசா தங்கராணி என்பவரது விசேட அடையாள அட்டை, தொழில் அட்டை என்பன கொட்டடி வீதிப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். [47800]

### கணிதம், ஆங்கிலம்

O/L 97 இல் Distinction, Credit பெறுபேறடைய ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும். அனுபவமுள்ள ஆசிரியர் 85, சிவன்கோயிலடி. சிவன்கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. [47785]

## ஓய்வூதியர்கள் ஏமாற்றம்

யாழ். மாவட்ட உள்ளூராட்சி ஓய்வூதியர்களுக்கு ஜூன் மாத வவுச்சர்கள் வந்துள்ள போதிலும் உரிய காசோலைகளும் பட்டியல்களும் வங்கிகளுக்கு வந்து சேராததால் ஓய்வூதியர்கள் ஓய்வூதியம் பெறமுடியாமல் நேற்று முன்தினம் வங்கிகளுக்கு சென்று ஏமாற்றத்துடன் திரும்பியதைக் காண முடிந்தது (ஐ-117)

## தாதியர் தேவை

**தாதியர் /வைத்தியசாலை உதவியாளர் தேவை**

நேரில் தொடர்பு கொள்ளவும்.

**Dr. P. சொர்ணலிங்கம்**
ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில்.
(47275)

---

# COMPUTER POINT

**(COMPUTER TRAINING DIVISION)**

REGD. NO:- J/DS/BR/63/97

**1) BEGINNERS COMPUTER STUDIES**

Computer Programming in Basic Language
&
DOS
(Duration: 4 Months)

**2. ADVANCED COMPUTER STUDIES**

I) Basic  II) Word Perfect
III) Windows  Iv) Fox Base

**Courses will Commence on 21 st of June 1997**

**Lectures by: S. R. LOGENDRA (D.C.A.)**
( Systems Analyst - M C S India )

**CONTACT: DIRECTOR,**
**(Computer Point)**
**No. 28, St. Patricks Rd.,**
**Jaffna.**

(47770)

---

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

இவ்வுலகில்:
1912 — 10 — 13

இறையுலகில்:
1996 — 06 — 15



### கிறிஸ்தோப்பிள்ளை சின்னப்பு

(வயாவிளான்)

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக நாளை 1997 - 06 - 16 ஆம் திகதி யாழ். அருள் ஆச்சிரமத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
உறவினர்கள்.

16/3, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (47801)

---

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்: 26 — 09 — 1931



மறைவு: 26 — 06 — 1996

திருமதி

### தில்லைநடேசன் புஷ்பவதி

(இளைப்பாறிய ஆசிரியை)

ஓராண்டு போனதுவோ உற்றாரைப் பிரிந்து தான்
புஷ்பம் என்றழைக்க பூமியிலே மலர்ந்திருந்தீர்;
வாழ்வின் விருப்பங்களை மண்ணிலே வரைந்துவிட்டு
எங்கு சென்று மறைந்தீர் எம்மைத் தவிக்கவிட்டு?

உங்கள் பிரிவால் துயருறும்:
சகோதரி, பெறாமக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
அத்தான்.

இலந்தையடி ஒழுங்கை,
உடுவில். (47773)

---

## அறிவித்தல்

### விசேட அடையாள அட்டை விண்ணப்பங்கள்

கச்சேரியிலுள்ள விசேட அடையாள அட்டை பிரிவு விசேட அடையாள அட்டை விண்ணப்பங்களை **30 - 06 - 1997** வரையும் ஏற்றுக்கொள்ளும், இதனை பிரதேச செயலர்கள்/உதவி அரசாங்க அதிபர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்கள் யாவும் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளும்படி வேண்டிக் கொள்ளப்படுகின்றீர்கள். 30 - 06 - 1997-க்குப் பின்னரும் அவ்வப்போது யாழ்ப்பாணம் வந்து சேரும் விண்ணப்பதாரிகளது விண்ணப்பங்களை அனுப்பி வைக்க முடியும் என்பதனையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**தி. திருலிங்கநாதன்,**
**கருத்திட்ட முகாமையாளர்,**
விசேட அடையாள அட்டைப் பிரிவு,
ஆட்பதிவுத் திணைக்களம்,
(சி/937) செயலகம், யாழ்ப்பாணம்.

---

## மங்களத் திறப்புவிழா!

## மணி வீடியோ அன் ஓடியோ ஹோம்

மறைந்தாலும் மணம் பரப்பும் சிறந்த விளையாட்டு வீரன்

**மணிவதனன்**

நினைவாக **15 - 06 - 97** இன்று காலை 8 மணிக்கு மங்களகரமாகத் திறந்து வைத்து மங்கள விளக்கேற்றுபவர் டாக்டர் திரு. றெஜி சொலமன் அவர்கள்.

★ மிகத்தரமான திரைப்படக் கொப்பிகளை மட்டுமே வாடகைக்கு வழங்குபவர்கள்.
★ பாடல் பதிவில் அனுபவம் மிக்கவர்கள்.
★ CM மூலம் பாடல் பதிவு செய்பவர்கள்.
★ புத்தம் புதிய படங்களை வாடகைக்குப் பெற்றிடவும், பதிவு செய்திடவும்,
★ உங்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தும் வகையில் 'புட்போல்', 'வொலிபோல்' போன்ற பந்துகள் சீர் திருத்திப் பெற்றிடவும்:

**மணி வீடியோ அன் ஓடியோ ஹோம்**
இல. 4 ஆம், 3 ஆம் குறுக்குத் தெரு,
(மக்கள் வங்கி முன்பாக)
பிரதான வீதி, யாழ்ப்பாணம். (47803)

---

## அறிவித்தல்

### மானிப்பாய் கோயில்பற்று பல நோ. கூ. சங்கம்

**கீழ்க்குறிப்பிடப்படும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**1 லிகிதர் பயிற்சியாளர் தரம்**

தகைமைகள்: — க. பொ. த. (சாதாரண தரத்தில்) 2 அமர்வுகளுக்கு மேற்படாமல் கணிதம், தமிழ் இரண்டிலும் திறமைச்சித்தியுடன் 6 (ஆறு) பாடங்களிலான சித்தியுடன், கூட்டுறவு பணியாளர் (சாதாரணதரம்) அல்லது கணக்கியலுடன் தொடர்பான பயிற்சி நெறியில் சித்தியும்.
வயது 18 — 35 வரை
வேதனம் — பயிற்சிக்கு சமூகமளிக்கும் நாளொன்றுக்கு ரூபா 75/ மட்டும். பயிற்சியின் கால எல்லை ஐந்து (5) மாதங்கள் மட்டும்.

**2 லொறி காப்பாளர் — (சமயோசிதம்)**

தகைமைகள்; — 8 ஆம் வகுப்பு சித்தியுடன் தேக ஆரோக்கியமும் இத் துறையில் அனுபவமும்.
வேதனம் — கடமையில் ஈடுபடும் நாளொன்றுக்கு ரூபா 60/- மட்டும் நாளொன்றில் தொடர் சேவை ஆற்றும் நிலைக்கு அதற்கான படிகள் வழங்கப்படும்.
வயது - 18 — 35

**3 விற்பனையாளர் - பயிற்சியாளர் தரம் (ஆண்பாலர் மட்டும்)**

தகைமைகள்; — கூட்டுறவு பயிற்சி (கனிஷ்ட தரம்) அல்லது 8 ஆம் வகுப்பிலான சித்தியும் விற்பனைத் தொழிலில் அனுபவமும்.
வேதனம் —கடமையாற்றும் நாளொன்றுக்கு ரூபா 60/ மட்டும் பயிற்சிக் காலம் 05 மாதங்கள் மட்டும்.

மேற்படி பதவிகளுக்கான தெரிவின் போது கூட்டுறவு பயிற்சி பெற்றோருக்கும் சங்க எல்லைப் பரப்பில் வதிவோருக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் ரூபா 5/- செலுத்தி சங்கத்தினால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப் பத்திரத்தைப் பூரணப்படுத்தி 23 - 6 - 97 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக — தலைவர், மானிப்பாய் கோயில்பற்று பல நோ. கூ. சங்கம், மானிப்பாய் என்ற விலாசத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

**பொது முகாமையாளர்**
மானிப்பாய் கோயில்பற்று
12 - 06 - 1997 ப நோ. கூ. சங்கம். (சி-935)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## இடை நிறுத்தம் ஏன்?

குடாநாட்டின் வசதி குறைந்த மக்கள் சுய தொழில்களை ஆரம்பிக்கவென வழங்கி வந்த கடனை இலங்கை வங்கி இடை நிறுத்தி வைத்திருக்கிறது. நிதிப் பற்றாக்குறை காரணமாகவே இந்த நடவடிக்கை என்று சொல்லப்படுகிறது.

கடந்த ஏழு வருட நீண்ட காலத்தில் கொழும்பிலிருந்து வங்கிகளுக்குப் பணம் வராமை, மக்கள் மத்தியில் பணப் புழக்கம் குறைந்தமை ஆகிய காரணங்களால் குடாநாட்டு வங்கிகளில் ஒரு சில காலகட்டத்தில் பணப் பற்றாக்குறை நிலவியது உண்மை தான்.

ஆனால் பிந்திய காலப் பகுதியில் அரசாங்க வங்கிகளில் பணப் புழக்கம் தாராளமாக இருந்தது. ஒரு கால கட்டத்தில் கொழும்புக்குப் பணத்தை அனுப்புவதில் இருந்த கஷ்டங்களினால் — பாதுகாப்புக் காரணங்களால் — வாடிக்கையாளர்கள் வைப்பிலிடும் பணத்தொகை மட்டுப்படுத்தப் பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

அவ்வாறு பண நிலைமை சீராக இருந்த போதிலும் பணம் தேவைப்படுவோருக்குக் கடன் வழங்குவது நிறுத்தப்பட்டிருந்தது. குடாநாட்டுமக்களின் பணம் தென்னிலங்கை சென்று அங்குள்ளவர்களுக்குப் பயன் பட்டது.

யாழ்ப்பாணம், அரசின் வசம் வந்த பின்னரும் குடாநாட்டு மக்களுக்கு வங்கிகள் ஊடாகக் கடன் வழங்கும் திட்டங்கள் உடனடியாக நடைமுறைக்கு வரவில்லை. சுயதொழில் முயற்சிக் கடன் போன்ற ஒரு சில வகைக் கடன்கள் மிக மிக அண்மையிலேயே — ஒரு சில மாதங்களுக்கு முன்னரே — வழங்க ஆரம்பிக்கப்பட்டன.

மீண்டும்பழையபடி வேதாளம் முருங்கை மரத்தில் ஏறியது போல, கடன் வழங்குதல் இடைநிறுத்தப்பட்டிருக்கிறது. இந்த இடை நிறுத்தம் நிரந்தர நிறுத்தமாக மாறினும் ஆச்சரியமில்லை.

போரினால் குடாநாட்டு மக்களில் பெரும்பாலானோர் தமது தொழில்களை இழந்து நிர்க்கதிக்கு ஆளாகியுள்ளனர். சிறு தொழில்களையாவது ஆரம்பித்தால் தான் அவர்கள் வீடுகளில் அடுப்பெரியும் என்ற நிலை. அத்தகையோர் சுயதொழில்களை ஆரம்பிக்கவென வழங்கப்படும்கடனை வங்கி நிறுத்தியது அநியாயம். எந்தக் காரணமும் ஏற்புடையதல்ல. தடங்கல் உடனடியாக நீக்கப்பட வேண்டும்.

குடாநாட்டைத் துரித கெதியில் புனர்நிர்மாணம் செய்யப் போகிறோம், மக்களின் புனர்வாழ்வுக்கென மாபெரும் திட்டங்களைத் தீட்டி வைத்திருக்கிறோம் என்று அரசு சொல்கிறது.

ஆனால் பத்தாயிரம் ரூபா சிறு கடன் வழங்கி தொழில் தொடங்க உதவும் கடன் திட்டம் நிறுத்தப்பட்டு விட்டது. அதனைச் செய்வோம் இதனைச் செய்வோம் என்ற வாய்ப் பேச்சும், பத்திரிகை அறிக்கைகளும் தமிழ் மக்களுக்குப் பயன்தரப் போவதில்லை. குடாநாட்டில்சேரும் பணத்தையே குடாநாட்டு மக்களின் நலனுக்கு பயன் படுத்தத் தடங்கல் போட்டுக் கொண்டு, தமிழ் மக்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கப் போகிறோம் என்பது வெளி உலகத்திடம் நல்ல பெயர் கேட்பதற்கான தந்திரமா?

# ஒருவருக்கு 2 வாக்குச் சீட்டுக்கள்: வழங்குவது குறித்து அரசு ஆராய்வு

கொழும்பு ஜூன் 15

எதிர்காலத்தில் தேர்தலின் போது இரண்டு வாக்குச் சீட்டுக்களை அறிமுகப்படுத்துவது குறித்து அராயப்படுகின்றது.

இதற்கமைய ஒரு வாக்காளர் தனது வாக்கை செலுத்தும் போது இரண்டு வாக்குச் சீட்டுக்களைப் பயன்படுத்த வேண்டியிருக்கும் என்று அரசமைப்பு சீர் திருத்தம் சம்பந்தமான நாடாளுமன்ற தெரிவுக்குழு தெரிவித்துள்ளது.

அமைச்சர் பேராசிரியர் ஜி எல். பீரிஸ் தலைமையில் மேற்படி குழு கூடிய போது இலங்கையில் தேர்தல் முறையில் திருத்தங்கள் கொண்டு வருவது பற்றி அரசாங்கம் சமர்ப்பித்துள்ள யோசனைகள் ஆராயப்பட்டன.

தேர்தல் தொகுதி மட்டத்தில் 99 பிரதிநிதிகளை நேரடியாகத் தெரிவு செய்யவும்—

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைப்படி 99 பிரதிநிதிகளைத் தெரிவு செய்யவும்— அரசாங்கம் யோசனை தெரிவித்துள்ளது.

இந்த யோசனைகளுக்கமைய 2 வாக்குச் சீட்டுக்கள் அவசியம் என்று அரசாங்கம் யோசனை தெரிவித்துள்ளது.

தேவைப்பட்டால் வாக்குச் சீட்டுகளில் வெவ்வேறு கட்சிகளுக்கு வாக்களிக்கும் வாய்ப்பு வாக்காளர்களுக்கு வழங்கப்படும்.

அதாவது தேர்தல் மட்டத்தில் ஒரு கட்சியையும் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைப்படி மற்றுமொரு கட்சியையும் ஒருவர் தெரிவு செய்ய முடியும்.

விருப்புத் தெரிவுமுறை முற்றாக ஒழித்துக் கட்டப்பட வேண்டும் என அரசால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனினும் தேசிய மட்டத்தில் சிறிய கட்சிகள் பெறும் வாக்குகளின் சத வீதத்துக்கமைய அங்கத்தவர்களை ஒதுக்குவது பற்றி நாடாளுமன்ற தெரிவுக்குழு பரிசீலனை செய்து வருகின்றது.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இந்தக் கூட்டத்தில் ஏ. ஸி எஸ். ஹமீட், விஜயபால மெண்டிஸ், ஷொக்ஸி ஆகியோர் ஐ.தே.க. சார்பிலும்—

எஸ். தொண்டமான், நீலன் திருச்செல்வம், டக்ளஸ் தேவானந்தா, சித்தார்த்தன், ரவிகருணநாயக்க ஆகியோர் ஏனைய கட்சிகள் சார்பாகவும் கலந்து கொண்டனர்.

(இ-5)

## மீன் பிடிப்படகு எடுத்து வர அனுமதி

யாழ்ப்பாணம், ஜூன் 15

மீன் பிடித் தொழிலுக்குத் தேவையான இயந்திர மீன் பிடிப் படகுகளையும் — மீன் பிடி வலைகளையும் — வடக்குக்கு எடுத்துவர பாதுகாப்பு அமைச்சினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனினும் குறிப்பிட்ட பிரதேசங்களில் எத்தகைய மீன் பிடித்தலுக்கு பாதுகாப்பு அமைச்சினால் அனுமதி வழங்கப்பட்டதோ அத்தகைய மீன்பிடித்தலுக்கு பயன்படுத்தக்கூடிய இயந்திர மீன் பிடிப்படகுகளையும் மீன் பிடி வலைகளையும் மட்டுமே வடக்குக்கு எடுத்துச்செல்ல முடியும்.

வடக்கு — கிழக்கு மீனவர்களின் பிரச்சினைகள் பற்றி ஆராய்வதற்காக நடைபெற்ற மாநாடு ஒன்றிலேயே இதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

(இ-5)

## கலைக்கூறு-2 பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூன் 15

காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் கிளைச் சங்கத்தினால் சாரணர் தலைவர்கள், குருளைச் சாரணர் தலைவர்களுக்கான கலைக் கூறு—2 பயிற்சி எதிர்வரும் 21 ஆம் 22 ஆம் திகதிகளில் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 4.30 மணி வரை சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் மாவட்ட ஆணையாளர் ந. சௌந்தரராஜன் தலைமையில் நடைபெறும்.

(இ)

## ஆசிரியர் செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 15

பாடசாலை ஆசிரியர்களுக்கான மீளாக்க நலவியல் செயலமர்வு எதிர்வரும் 21ஆம், 22 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் நடைபெறும்.

இதற்கான நிதியுதவியை ஐ. நா. சனத்தொகை நிதியம் வழங்குகிறது.

மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட பிரதேசங்களில் உள்ள பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்காகவே இது ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

(இ-15)

## நூலகவாரவிழா

தென்மராட்சி, ஜூன் 15

சாவகச்சேரி பிரதேச சபையின் நாவற்குழி உப அலுவலக பொது நூல் நிலையத்தின் மறவன்புலோ கிளையை அபிவிருத்தி செய்யும் பொருட்டு இக் கிளையின் வாசகர் வட்டத்தினால் நூலக வாரவிழா கொண்டாடப்படவுள்ளது.

இவ்விழாவின் ஆரம்ப நிகழ்வுகள் இன்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணிக்கு மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்தில் அதிபர் ச. ஞானலிங்கம் தலைமையில் தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளையினால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது(இ-117)

## திருத்த வேலை

யுத்தத்தினால் சேதமடைந்த யாழ். வை. எம்.சி. ஏயில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(இ-100)

# அகிலம்தழைக்க அருள்மழைபொழியும் அற்புதவரத்தன் அந்தோனி ஐயன்

சொல்லவரும் மெய்ஞானச் சத்திய மா மறைக்கோர் வெல்லமென இனிப்பவர் எல்லை இல்லாக் கோடி அற்புதராம் புனித அந்தோனி ஐயன். அற்புத வரத்தன், என்றும் அருள் வழங்கும்; வள்ளல் என்றும் அருள் தவழும் முகத்தோன் என்றும் எல்லா மதங்களையும் சார்ந்த பக்தகோடிகளால் இவர் துதித்து வணங்கப்படுகின்றார். கற்றவரும் கொற்றவரும் மற்றவரும் காலடி தேடி ஓடி வந்து பணிந்து சற்குருவாகிய இவரிடம் தமது வாழ்வுக்கு வேண்டிய வளம் நிறைந்த இக, பர வரங்களை வேண்டிச் செல்கின்றனர்.

''வாழ்பவன் நானல்ல; என்னில் வாழ்பவர் யேசுவே!''— என்கின்ற புனிதர் சின்னப்பரின் கூற்றிற்கு உயிர் கொடுத்தவராக இவர் வாழ்ந்தார். ஒரு தலைசிறந்த ஞானியாகவும் போதகராகவும் திகழ்ந்த இவர் இறைவனது திருவார்த்தையைச் சிரமேற் கொண்டார். இறை ஒன்றிப்பில் தன்னை மறந்தவராக மூழ்கித் திளைத்திருந்தார். இதனால் உலகில் உயிருடன் வாழ்ந்தபோது பல தடவைகள் இறை பிரசன்னம் கிடைக்கப் பெற்றார். குழந்தை யேசு இவரின் கரங்களில் தவழ்ந்து அணைத்து முத்தமிட்டார்; ஒப்பாரும் மிக்காருமற்ற இறைவனது திரு உறவை புனிதராகிய இவர் தனது வாழ்விலே உண்மையாகப் பெற்றார். இதனால் இவருக்கு வரம் வழங்கும் பேராற்றலை ஆண்டவன் கொடுத்திருந்தார்.

கேட்டவர்க்கு கேட்டவரம் கொடுத்தார். இவர் கோடி அற்புதர் என அழைக்கப்படுகின்றார். தன்னை நினைத்து தலை குனிந்து கண்ணீர் விட்டுப் பிரலாபிக்கும் அடியார்களை மறவாதவராக இன்று பரலோகத்தில் இருந்து கொண்டும் பரிவுடன் கண்ணோக்கி வருகின்றார்.

பதுவை மா நகரின் பரிசுத்தன் இவர். புதுமையின் பொக்கிசம், மோட்சத்தின் அலங்காரம், கற்பின் கலங்கரை என்றெல்லாம் கத்தோலிக்க திருமறையாலும்; அன்னையாம் திருச்சபையாலும் புகழாரம் சூட்டிக் கௌரவிக்கப்பட்டு புனிதர்களின் வரிசையிலே வைத்து வணங்கப்படுகின்றார். எண்ணரிய நவ வல்லோன், தன்னொளியின் எழில் முகத்தோன், சத்திய வேதத்தின் முத்து என்றெல்லாம் வாயார; நெஞ்சார புனிதரை புகழாத அன்பு நெஞ்சமே இல்லை எனலாம். உலகின் பல பாகங்களிலும் உள்ள பிரமாண்டமான பெரிய; சிறிய ஆலயங்களில் எழுந்தருளி இருந்து இன, மத பேதமின்றி அருள்மாரி பொழிந்து வருகின்றார். சஞ்சலம் அகற்றும் உயர் ஞானச் சஞ்சீவி நீ என்றே அவரது தஞ்சமதைக் கெஞ்சி இரப்பவர்க்கு, மடைதிறந்தோடும் மடுவு வெள்ளமென தனது இரக்கப் பெருக்கைச் சுரக்கின்றார். அவர் கோயில் கொண்டுள்ள ஆலயங்களில் எல்லாம் பிறசமய சகோதரர்கள் நாளாந்தம் குவிந்த வண்ணமிருப்பதை நாம் காணலாம்.

ஓ! என்னருமைக் கிறிஸ்தவ சகோதரமே! இன்று எமது பாதுகாவலராகிய அந்தோனியாரின் விழாவைப் பக்தி, பற்றுடன் கொண்டாடி, அவரது நல்லாசீர்வாதத்தைக் கேட்டு நிற்கும் நீ அல்லற்படும் உனது அயலானை உன்போல நேசிக்கின்றாயா? புனித அந்தோனியார் இறைவனையும்; மக்களையும் ஒன்றாக நேசிக்கின்றார். நீயும் அப்படியா? தனக்கொரு நீதி பிறர்க்கொரு நீதி, அபாண்டம், அவதந்திரம், பிரட்டு, பொறாமை, பேராசை, கறுப்புச் சந்தை, கலப்படம், யாவும் நலிந்து, மலிந்து காணப்படும் இன்றைய உலகில் நீயும் அந்தோனியார் போல வாழுகின்றாயா? எமது கிறிஸ்தவ வாழ்வின் அழைப்பு இதுவா? என்னருமைச் சகோதரமே! நீ ஒரு கணம் எண்ணிப்பார். நாம் ஒவ்வொருவரும் புனிதர் அந்தோனியாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வாழ இன்றிலிருந்து திடசங்கற்பம் பூணுவோமாக. அவரைப்போல வாழாவிடில் நாம் நிலையான விண்ணக வாழ்வை அடையமுடியாது. இதனை உணர்ந்து செயற்படுவோமாக. நாவழியா நாயகனாகிய கோடி அற்புதரின் ஆசீர் எம் ஒவ்வொருவர் மேலும். எமது நாடு, இனம் யாவற்றிலும் மலர்வதாக; பெருகுவதாக ஆமென்.

உடுவில்
தே. ச. வில்சன்

## ஞாயிறு நற்பிரசாதம்

## கோடி அற்புதரே!

கோடி அற்புதரே! நாங்கள்
கோடிக்குக் கோடி ஓடி
வாடித்தான் வந்தோம் நொந்து
வந்தவர்க்கு ஆசி நல்கச்
சோடித்த தேரில் வந்தீர்
சோபனம்! எமது மண்ணில்
நீடித்த அமைதி வேண்டும்
நிமலனைப் பிரார்த்திப்பீரே!

வன்னியின் காடும் சூடும்
வருத்தமும் வருத்த ஆங்கே
இன்னும் எம் சோதரர்கள்
இடர்ப் படுகின்றார்! தேவ
கன்னியின் மகனை அன்புக்
கரங்களில் தாங்கும் துய்யா!
அன்னவர் துயரந் தீர
ஆண்டவரிடம் மன்றாடும்!

தேனுக்கும் இனிமை சேர்க்கும்
திருமொழி பிரசங்கத்தால்
மீனுக்கும் அறிவு தந்த
மேலவா! இலங்கை மக்கள்
ஊனுக்கும் உதிரத்துக்கும்
ஒரு முற்றுப் புள்ளி வைத்து
வானுக்கும் உரியராக
வாழ்ந்திடப் பிரார்த்திப்பீரே!

- 'பாவலிவன்'

## நாளை

ஆனி 2
திங்கட்கிழமை
திதி: ஏகாதசி
பின்இரவு 2.38 வரை:
நட்சத்திரம்: சித்திரை
பிற்பகல் 12.54 வரை.
ஏகாதசி விரதம்
சுபநேரம் : 11.53-1.23
ராகுகாலம்: 7.23 -8.53
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாநாயக்கர்களின் ஆலோசனை

# இனப்பிரச்சினை தீர்வுக்கு அவசியம்

## அமைச்சர் ஜெயக்கொடி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 15

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் மல்வத்தை அஸ்கிரிய மற்றும் பிற நிக்காயக்களின் மகாநாயக்க தேரர்களின் ஆலோசனை மிகவும் முக்கியமானது;

சமய கலாசார விவகாரங்களுக்கு பொறுப்பான அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அமைச்சர் ஜெயக்கொடி தற்போது பௌத்த சாசன அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை — மல்வத்தை அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்கர்கள் அரசின் அதி உயர் ஆலோசனைச் சபைக் கூட்டத்தில் இனிமேல் சமுகமளிக்கப்போவதாக அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடியிடம் உறுதியளித்துள்ளனர்.

இந்த அதிஉயர்சபையின் அடுத்த கூட்டத்தை கண்டியில் நடத்துவதுஎன்று அமைச்சர் தெரிவித்த கருத்துக்கும் அவர்கள் ஆதரவு தெரிவித்துள்ளார். (இ-5)

# வல்வையில் ஓய்வூதிய வவுச்சர்கள் உரியவர்களிடம் நேரில் கையளிப்பு

## முறைகேடுகளைத் தவிர்க்க ஏற்பாடு

வல்வெட்டித்துறை கிராமிய வங்கி, வல்வெட்டித்துறை மக்கள் வங்கி ஆகியவற்றில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான ஓய்வூதிய வவுச்சர்கள் வல்வெட்டித்துறை தென்கிழக்கு(ஜே/392) கிராம அலுவலர் அலுவலகத்தில் வைத்து திங்கட்கிழமை காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2,00 மணிவரை வழங்கப்படும்.

பருத்தித்துறை பிரதேச செயலக கணக்காளர் முன்னிலையில் இவ் வவுச்சர்கள் வழங்கப்படும்.

ஓய்வூதியம் பெறுவதில் முறைகேடுகள் இடம்பெறுவதாகச் சுட்டிக் காட்டப்பட்டிருப்பதை அடுத்தே வவுச்சர்கள் உரியவர்களிடம் நேரில் கையளிக்கப்படுகின்றன.

இந்த நடைமுறைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பருத்தித்துறைப் பிரதேச செயலக கணக்காளர் எஸ். கமலேஸ்வரன் கேட்டுள்ளார்; (ஐ-173)

# விடுவிக்கப்பட்டோரில் 10 பேர் கொழும்பில் ஒப்படைப்பு

## 12 பேர் இன்று யாழ். வருவர்

யாழ்ப்பாணம், ஜூன் 15

படையினரால் கைதுசெய்யப்பட்டு நேற்று முன்தினம் கொழும்பில் விடுவிக்கப்பட்ட 22 பேரின் விவரங்களை ஈ. பி. டி. பி. பணிமனை தந்துள்ளது.

இவர்களில் 10 பேர் நேற்று முன்தினம் கொழும்பில் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். ஏனைய 12பேர் இன்று யாழ்ப்பாணத்திலுள்ள ஈ. பி டி. பி. பணிமனையில் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

நேற்று .கொழும்பில் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டோரின் விவரம்:-

★ இராமசாமி பாக்கியராசா—ஆனைக்கோட்டை.

★ விஸ்வநாதன் விஜயகுமார்—யாழ்ப்பாணம்.

★ பி. சிவபாக்கியம்—ஆனைக்கோட்டை.

★ தில்லை நடராஜா மோகனராஜ் — உடுவில் தெற்கு.

★ நடராசா சிவகுமார்—சுதுமலை தெற்கு.

★ ராஜரட்ணம் ஜெயசந்திரிகா—அளவெட்டி வடக்கு.

★ முருகேசு யோகராசா—புலோலி கிழக்கு.

★ சாந்தலிங்கம் செல்வரூபன்—கோப்பாய் வடக்கு.

★ பாலசுப்பிரமணியம் கிருபாகரன்—கோப்பாய்.

★ சற்குணராசா பிரபாகரன்—கல்வியங்காடு.

இன்று யாழ்ப்பாணம் ஈ.பி. டி.பி. பணிமனையில் கையளிக்கப்படவுள்ளோரின் விவரம்:

★ ஆறுமுகம் இராஜசேகரன் — கொழும்புத்துறை.

★ பூபாலசிங்கம் புவனதாஸ் — கோண்டாவில் கிழக்கு.

★ சண்முகராசா கெங்காதரன் — மட்டுவில் தெற்கு.

★ கந்தசாமி கணபதிப்பிள்ளை — கொடிகாமம் வடக்கு.

★ பொன்னுத்துரை திருவிங்கம் — இணுவில் தெற்கு.

★ சின்னத்தம்பி ஜெயேந்திரன் — கைதடி மத்தி.

★ அருமைநாதன் அசோக் — கைதடி கிழக்கு.

★ சுப்பிரமணியம் ஜெகதீஸ் — சாவகச்சேரி.

★ ராஜேந்திரன் ராஜேஸ்வரன் — யாழ்ப்பாணம்.

★ யோகராஜா யோகரஞ்சினி — சங்கத்தானை.

★ மகாலிங்கம் சசிகலா — உரும்பிராய்.

★ துரைராஜா விமல் — சாவகச்சேரி. (இ-10)

# கைதானவர்களின் சைக்கிள் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 15

குடாநாட்டில் பல்வேறு சந்தர்ப்பங்களில் படையினரால் கைது செய்யப்பட்ட 15 பேரின் சைக்கிள்கள் யாழ். பொலீஸ் நிலையத்தில் வைத்து எதிர்வரும் 20 ஆம் திகதி உரியவர்களிடம் கையளிக்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் அல்லது நெருங்கிய உறவினர்கள் உரிய ஆதாரம்காட்டி அவற்றினைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ். ஈ.பி டி. பி. அலுவலகத்தினர் அறிவித்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட 15 பேரின் பெயர் விவரங்கள் வருமாறு:-

★ ஆறுமுகம் ரவி — அரியாலை.

★ ராஜரட்ணம் கோபாலரட்ணம் — கொக்குவில் மேற்கு.

★ நடேசன் தியாகராசா — பண்டத்தரிப்பு.

★ கனகரட்ணம் கனகரூபன் — சாவகச்சேரி.

★ பொன்னையா ராஜசேகரன் — நாவற்குழி.

★ இராசையா யோகேஸ்வரன் — மீசாலை வடக்கு.

★ சேவியர் தேவனேசன் — சண்டிலிப்பாய்.

★ அன்ரன் ஆன்ஜுட் அனுசா— சண்டிலிப்பாய்.

★ லிங்கம் மாணிக்கம் — நவாலி வடக்கு.

★ யோகராசா யசோதரன் —கொழும்புத்துறை.

★ கிருஷ்ணவேல் வீரசிங்கம் —புத்தூர்.

★ ஐயாத்துரை சாந்தகுமார் சிறுப்பிட்டி.

★ தியாகராசா ரதிசீலன் —மயிலிட்டி வடக்கு.

★ சின்னத்துரை ரவிச்சந்திரன் — கோயிலாக்கண்டி.

★ தங்கராசா ஸ்ரீசங்கர்— சங்கானை வடகிழக்கு.

# உடுவில்பகுதியில் பெண் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

உடுவில் மானிப்பாய் வீதி ஆலடிப்பகுதியில் நேற்றுக் காலை 10.30 மணியளவில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றின்போது வீடு ஒன்றில் குளித்துக் கொண்டிருந்த பெண் ஒருவர் கயாம் அடைந்தார்.

காங்கேசன் துறையில் இருந்து இடம்பெயர்ந்து ஆலடிப்பகுதியில் வசித்து வரும் மகேந்திரம் மங்களேஸ்வரி (வயது 29) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

## கிளைமோர்...

(முதலாம் பக்கத் தொடர்)

திலுள்ள 512 ஆவது படையணித் தலைமையகத்தில் நஷ்டஈடு வழங்கப்பட்டது. புலிகளின் இக் கொடிய கண்ணிவெடிக்குப் பலியானோரும் காயமடைந்தோரும் மீன்பிடித் தொழிலை ஜீவனோபயமாகக் கொண்ட சாதாரண குடும்பங்களைச் சேர்ந்தோர் ஆவர்.

அன்றைய தினம் யாழ்ப்பாணம் ஸ்ரீநாகவிஹாரை முன்றலில் 25 பாடசாலைச் சிறார்களுக்கு இராணுவத் தளபதி பரிசில்களை வழங்கினார்,

இவ் வைபவத்தில் மேஜர் ஜெனரல் பி. ஏ. கருணதிலக, மேஜர் ஜெனரல் எல். பி. பலகல்ல, பிரிகேடியர் பி.பி. டபிள்யு ஜயசுந்தர. யாழ். அரசாங்க அதிபர் செ. பத்மநாதன் மூத்த இராணுவ அதிகாரிகள் மற்றும் அரச நிறுவனங்களின் உள்ளூர் தலைவர்கள் ஆகியோர் பங்கு பற்றினர்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## முக்கிய...

(முதலாம் பக்கத் தொடர்)

பொசன் தினத்தின் பின்பு — அதாவது 20 ஆம் திகதிக்குப் பின்பு படையினர் தமது நகர்வை மீண்டும் ஆரம்பிக்கலாம் என்று ராணுவ வட்டாரங்களை ஆதாரம் காட்டி கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

கைப்பற்றிய பிரதேசங்களில் தமது நிலைகளைப் பலப்பலத்தும் பணியில் படையினர் நேற்று ஈடுபட்டுக்கொண்டிருந்ததாக அரச தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

பாதுகாப்பை மேலும் உறுதி செய்யும் நோக்கத்துடனேயே சில ஆயுத தளபாடங்கள் வவுனியாவுக்கு எடுத்து[illegible] பப்படுகிறது.

(இ-10-21- 164)

# புதிய சோதனைச் சாவடிகள் நேற்று முதல் இயங்க ஆரம்பம்

நல்லூர், திருநெல்வேலிப் பகுதிகளூடாக யாழ்ப்பாணப் பகுதிக்குள் நுழையும் மக்களுக்கான நுழைவாயில்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன் நுழைவாயில்களில் இராணுவ சோதனைச் சாவடிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

யலாலி, யாழ்ப்பாணம் வீதியில் பரமேஸ்வராச்சந்தியில் ஒரு சோதனைச் சாவடியும் —

இராசவீதி, சங்கிலியன் வீதிச் சந்தியில் ஒரு சோதனைச் சாவடியும் அமைக்கப்பட்டு நேற்று முதல் இவ்விரண்டு நுழைவாயில்களுமே பாவிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. (இ-15)

# மன்னாருக்கு வரும் அகதிகளுக்கு ஒரு நேரத்துக்கே சமைத்த உணவு

தலைமன்னார், ஜூன் 15

மீளக்குடியேறச் செல்லும் அகதிகளுக்கு வவுனியாவிலும் திருகோணமலையிலும் வழங்கப்படும் உதவிகள் மன்னாரில் தங்கியுள்ள அகதிகளுக்கு வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

வன்னிப் பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் வருவதற்காக மன்னாருக்குச் செல்லும் அகதிகள் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் —

அவர்கள் பேசாலை, காட்டாஸ்பத்திரி மற்றும் எருக்கலம்பிட்டி ஆகிய இடங்களில் அமைந்துள்ள முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்றும் — தெரிவிக்கப்படுகிறது.

இம் முகாம்களில் தங்கவைக்கப்படுபவர்களுக்கு அரசின் திட்டத்தின்படி மூன்று நாள்கள் சமைத்த உணவு வழங்கப்படுவது நடைமுறையாக இருந்து வருகிறது.

வவுனியாவில் வளர்ந்தோருக்கு நாளொன்றுக்கு 45 ரூபாவும் திருகோணமலையில் 49 ரூபாவும் சமைத்த உணவு வழங்கப்படுகிறது.

ஆனால் மன்னாரில் தங்கவைக்கப்பட்டுள்ள அகதிகளில் வளர்ந்தோருக்கு 25 ரூபா மாத்திரமே சமைத்த உணவு வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிதி நாளொன்றுக்கு மதிய உணவு வழங்க போதுமானதாக இல்லை;

மன்னாரிலுள்ள மூன்று முகாம்களில் சுமார் மூவாயிரம் அகதிகள் யாழ். வருவதற்காக காத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

# துப்பாக்கி வேட்டில் சிப்பாய் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

தற்செயலாக இடம்பெற்ற துப்பாக்கி வேட்டுக்கு இலக்காகி இராணுவ சிப்பாய் ஒருவர் காயமடைந்தார்.

கொக்குவில் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற இச் சம்பவத்தில் சோமபால நவரட்ண (வயது 21) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின் பலாலி இரணுவ ஆஸ்பத்திரிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார். (இ-15)

# ஆசிரிய பயிற்சி அதிகார சபை

ஆசிரியர் சேவையிலுள்ள பயிற்சி பெறாத ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கவென ஆசிரிய பயிற்சி அதிகார சபை ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 40 கோடி ரூபா செலவில் மேற்கொள்ளப்படவுள்ள இத் திட்டத்தின் கீழ் 80 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களை நிறுவ உத்தேசிக்கப்பட்டுவருகிறது. (இ-10)

## உலகின்...

(முதலாம் பக்கத் தொடர்)

சேர்ந்தவர்களே இப்பதவிக்கு நியமிக்கப்படவுள்ளனர் என்றும்—தெரிவிக்கப்பட்டது.

கடந்த 13 ஆண்டுகளாக அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெறும் யுத்தம் காரணமாக இலங்கையின் நற்பெயர் கெட்டுவருவதாக பி.பி.சி. தெரிவித்தது.

(இ-4-10)

# மன்னாரிலும் தாக்குதல்

மன்னார், ஜூன் 15

நேற்றுக் காலை 9.30 மணியளவில் மன்னார் பட்டினத்தில் பொலீஸார் மீது கிரனேட் வீசப்பட்டதாகவும் —

அச் சம்பவத்தில் மூன்று பொலீஸார் கொல்லப்பட்டதாகவும்— வவுனியாச் செய்திகள் நேற்றுத் தெரிவித்தன.

எனினும் அச் செய்தி ஊர்ஜிதப்படுத்தப்படவில்லை.

(இ-10-164)

## கிரனேட்...

(முதலாம் பக்கத் தொடர்)

நேற்று மாலை 5. 45 மணி அளவில் இச் சம்பவம் இடம்பெற்றது

இராணுவச் சாவடியில் உள்ள படையினருக்கு உணவு எடுத்து வந்த டிராக்டரில் இருந்தோர் மீது கிரனேட் வீசப்பட்டது.

இந்த செய்தி எழுதப்படும் வரை உயிரிழந்தவர் அடையாளம் காணப்படவில்லை. (இ-10)

## வெலிகந்த...

(முதலாம் பக்கத் தொடர்)

கௌசன் ஆகியோர் களப்பலியானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலின் போது இராணுவ அதிகாரி, சிப்பாய் உட்பட மூவர் உயிரிழந்ததும்

ஆறு சிப்பாய்களும், இரு பொதுமக்களும் காயமடைந்ததும் தெரிந்ததே — (இ-10-114)

## 70 இலங்கையர்..

(முதலாம் பக்கத் தொடர்)

துவைக்கப்பட்டுள்ள இவர்கள் தங்களை இலங்கைக்குத்திருப்பி அனுப்ப வேண்டாம் என்ற கோரிக்கையை முன்வைத்தே உண்ணா விரதத்தில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-10-164)

## இலங்கை கடற்படை..

(முதலாம் பக்கத் தொடர்)

இந்தக் கப்பலின் தளபதி கொழும்பில் தங்கியிருந்த சமயம், இலங்கை பாதுகாப்பு அதிகாரிகளைச் சந்தித்தார்.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், பிரெஞ்சுத் தூதுவருடன் சென்று இந்தக் கப்பலைச் பார்வையிட்டார். (இ-4)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், [illegible] வீதி, 861 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15-06-1997 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org